பிப்ரவரி 2021
விலை ரூ. 20/–

மலர் : 51 இதழ் : 8

தமிழரசு

தமிழரசு 1970-2020
பொன்விழா ஆண்டு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
28.01.2021 அன்று சென்னை, போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள
மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் **புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் வாழ்ந்த
அரசுடைமையாக்கப்பட்ட ‘‘வேதா நிலையம்’’ நினைவு இல்லத்தினை திறந்து வைத்தார்கள்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி வருடம் : தை – மாசி
பிப்ரவரி 2021
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 8

ஆசிரியர் - வெளியிடுபவர்
தெ. பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
சீ. ராஜன்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
ச. மஞ்சுளா
பெ. சதீஷ்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

“மாண்புமிகு அம்மாவின் அரசு, மக்களுக்கு நலன் பயக்க மக்களை நாடிச் சென்று பல்வேறு நலத் திட்டங்களையும், நாடு முன்னேற்றமடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தும் அரசாக செயல்பட்டு வருகின்றது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

★ **பல்வேறு துறைகளின் சிறப்பான செயல்பாடுகளினால், தேசிய அளவில் ஏராளமான விருதுகளைப் பெற்று, வெற்றிநடை போடுகிறது தமிழகம்**
*மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோகித்** அவர்கள் 02.02.2021 அன்று, சட்டப்பேரவையில், 2021ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.* 4

★ **இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பதில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது**
*சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் பதிலுரை–05.02.2021* 18

★ **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்**
*தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 28.01.2021* 43

★ **திருவள்ளுவர் திருநாள் விருதுகள் மற்றும் சித்திரைத் தமிழ் புத்தாண்டு விருதுகள்**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 01.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள்.* 57

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
27.01.2021 அன்று சென்னை, மெரினா கடற்கரையில், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் **புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் நினைவிடத்தைத் திறந்து வைத்தார்கள்.

பல்வேறு துறைகளின் சிறப்பான செயல்பாடுகளினால், தேசிய அளவில் ஏராளமான விருதுகளைப் பெற்று, வெற்றிநடை போடுகிறது தமிழகம்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்
திரு. **பன்வாரிலால் புரோகித்** அவர்கள்
02.02.2021 அன்று, சட்டப்பேரவையில்,
2021ஆம் ஆண்டிற்கான
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
முதல் கூட்டத் தொடரைத் தொடங்கி வைத்து
ஆற்றிய உரை.

2021ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரில் உரையாற்றுவதை நான் பெரும் பேறாக கருதுகிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது, 15ஆவது சட்டமன்றத்தின் நிறைவு கூட்டத்தொடராகும். பல அமர்வுகளில் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களின் வாயிலாக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பினை நல்கிய இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் திறன்மிகு தலைமையின் கீழ், இந்த அரசு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டை, நாட்டிலேயே தலை சிறந்த மாநிலம் ஆக்கும் இலக்கினை அடைவதில் இந்த அரசு வெற்றிநடை போடுகிறது.

இன்று நாம், மிகவும் அசாதாரணமான, முன்நிகழ்வுகள் அற்ற சூழலில் சந்திக்கின்றோம்.

நம் வாழ்நாளில், முன் எப்போதும் காணாத அளவில், மிகப் பரவலான ஒரு பெருந்தொற்றுநோயால் உலகம் பாதிக்கப்பட்டுள்ளது. கோவிட்–19 பெருந்தொற்று நோயை எதிர்கொள்வதற்கு அனைத்து அரசு இயந்திரங்களையும் திறம்பட ஒருங்கிணைத்த பெருமையும், புகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும்.

உரிய நேரத்தில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டன. பெருந்தொற்றுநோயின் பரவலை தடுப்பதற்கு, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட காலத்திலும், போதிய அளவில் அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பு உறுதி செய்யப்பட்டது. பின்னர், தேவைக்கு ஏற்ப, படிப்படியாக தளர்வுகள் அனுமதிக்கப்பட்டன. காய்ச்சல் முகாம்கள் மூலம் நோய் கண்காணிப்பு, தொடர் பரிசோதனை மற்றும் நோய்த்தொற்றின் தடம் அறிதல் நடவடிக்கைகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டன. சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்தி, மனித வளங்களை அதிகரித்து, பயனுள்ள சிகிச்சை நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. ஆர்.டி–பி.சி.ஆர் பரிசோதனை கருவிகள், மருத்துவ உபகரணங்கள், முழு உடல் பாதுகாப்புக் கவச உடைகள் மற்றும் தரமான மருந்துகள் போதிய அளவில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டன.

ஆர்.டி–பி.சி.ஆர். பரிசோதனை முறையின் விலை, பிற பரிசோதனை முறைகளை விட அதிகமாக இருந்தாலும், அதன் உயர்தரத்தினைக் கருத்தில் கொண்டு, நாட்டிலேயே பிரத்தியேகமாக ஆர்.டி–பி.சி.ஆர் பரிசோதனை முறையைக் கையாண்ட ஒரே பெரிய மாநிலம் தமிழ்நாடாகும். நோயின் நிகழ்வை சரியாகக் கண்டறிவதையும், நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதையும் இது உறுதி செய்துள்ளது. கோவிட்–19 பெருந்தொற்றுநோயை எதிர்கொள்வதற்கு, பொது சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில், இந்த அரசு செய்த முதலீடுகள், பெரிய அளவில் பலனளித்துள்ளன. சுகாதார உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, மருத்துவமனைகளிலும், கோவிட் பராமரிப்பு மையங்களிலும் கூடுதலாக, 1,38,309 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆக்சிஜன் வசதிகள் கொண்ட 34,849 படுக்கைகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன.

மேற்கூறிய நடவடிக்கைகள் வாயிலாக, இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் இடையே மட்டுமல்லாது, உலக அளவில் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதிலும், உயிர் இழப்பைக் குறைப்பதிலும் தமிழ்நாடு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. நோய்த் தொற்று மீண்டும் பரவுவதைத் தடுப்பதற்கான தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார். தமிழ்நாட்டில் கோவிட்–19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர், அனைத்து அமைச்சர்கள், அரசு இயந்திரம், குறிப்பாக சுகாதாரம், வருவாய், காவல், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய துறைகளின் முன்களப் பணியாளர்கள் இணைந்து ஓர் அணியாக அயராது உழைத்துள்ளதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் கோவிட் தடுப்பூசி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். மாநிலம் முழுவதும் கோவிட் தடுப்பூசி திறம்பட வழங்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, கோவிட்–19 தொற்றுநோய்க்கு எதிரான போரில் ஈடுபட்டு வரும் சுகாதாரத் துறைப் பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுகின்றது. அடுத்த கட்டமாக, ஏனைய முன்களப் பணியாளர்களுக்கும் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்படும். அனைத்து மக்களுக்கும், அரசு உரிய நேரத்தில், படிப்படியாக தடுப்பூசியை வழங்கும். இதனால், இயல்பான சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் முழுமையாகச் செயல்படத் தொடங்கும்.

புதிய பாதை வகுக்கும் இரண்டு புதுமையான சிறப்பு முயற்சிகளை, இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. மாநில அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று 'நீட்' தேர்வில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு, சிறப்புச் சட்டத்தின் மூலம், மருத்துவப் படிப்பு, பல் மருத்துவப் படிப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி படிப்புகளுக்கான அரசு இடங்களில் 7.5 சதவீதம் ஒதுக்கீடு செய்ததன் மூலம், சமூக நீதி மற்றும் சம நீதியில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் 435 மாணவர்கள் இந்த ஆண்டில் பயனடைந்துள்ளது மனமகிழ்ச்சி அளிக்கிறது. இந்த மாணவர்களின் கல்வி மற்றும் விடுதிக்கான மொத்தச் செலவையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. இந்நடவடிக்கை, அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மற்றும் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களை, மருத்துவக் கல்வி பயில்வதற்கு பெரிதும் ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின்

தொலைதூர கிராமப்புறங்களில் பணியாற்ற விரும்பும் மருத்துவ வல்லுநர்களையும் உருவாக்கும். தொலைதூர கிராமப்புறங்களிலும், நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலும் இலவச ஆரம்ப சுகாதார வசதிகளை அளிப்பதற்காக, 2,000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள் உருவாக்கும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஏற்கெனவே, இந்தத் திட்டம் ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்ட முன்மாதிரி திட்டமாகப் பாராட்டப்படுகிறது. இவ்விரண்டு சிறப்பு முயற்சிகளைச் செயல்படுத்தியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மக்களுக்கு நல்லாட்சியை வழங்க வேண்டுமென்ற இந்த அரசின் நிலையான நோக்கத்தை அனைவரும் நன்கு அறிவார்கள். கடந்த ஆண்டு, முதன்முறையாக இந்திய அரசு வெளியிட்டுள்ள நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில், தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றது. மேலும், 'இந்தியா டுடே' பத்திரிகை 2020ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில், 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில், மேற்கொண்ட ஆய்வில், 'ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம்' என்று தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த விருதுகள், மாண்புமிகு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின், நடைமுறைக்கு ஏற்ற, செயல்திறன் மிக்க ஆளுமையினை எடுத்துக்காட்டுகிறது. நம் மாநிலம் தொடர்ந்து தேசிய அளவில் பெறும் விருதுகள் மற்றும் பாராட்டுகளுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவர் தலைமையின் கீழ் செயல்படும் அனைத்து அரசு அமைப்புகளையும் நான் வாழ்த்துகிறேன்.

'பரிவுள்ள ஆளுமை' என்பது இந்த அரசின் முக்கியக் கோட்பாடாகும். 'அம்மா திட்டம்', 'முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டம்', 'வட்ட இணையவழி மனுக்கள் கண்காணிப்பு அமைப்பு' மற்றும் 'அம்மா அழைப்பு மையம்' உள்ளிட்ட பல்வேறு குறை தீர்க்கும் வழிமுறைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. தற்போதுள்ள அனைத்து குறை தீர்க்கும் அமைப்புகளையும் முதலமைச்சரின் உதவி மையம் வாயிலாக ஒருங்கிணைத்து, 'முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்' செயல்படுத்தப்படும். அனைத்துக் குறைகளையும் உரிய கால வரம்பிற்குட்பட்டு, தீர்வு காண்பதை உறுதிசெய்யும் வகையில், ஒரு வலுவான வழித்திட்ட அமைப்பும், குறைகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கான முகப்புப் பக்கமும் உருவாக்கப்படும். குடிமக்கள் தங்கள் வீட்டிலிருந்தே, முதலமைச்சரின் உதவி மையத்தின் 1100 என்ற எண்ணிற்கு அழைப்பதன் மூலம், அரசின் சேவைகளை விரைவில் பெற இயலும்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதே இந்த அரசின் தலையாய நோக்கமாகும். நோயின் தடம் அறிதல், ஊரடங்கை நடைமுறைப்படுத்தியது, நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளை திறம்படக் கண்காணித்தது என பெருந்தொற்றை எதிர்கொள்வதற்கு காவல்துறையின் பங்கு குறிப்பிடத்தக்கது. பல்வேறு கட்டுப்பாடுகளை அமல்படுத்துவதில் காவல்துறை முழுமையாக ஈடுபட்டிருந்தாலும், சட்டம் ஒழுங்கு தொடர்ந்து சிறப்பாக நிலைநாட்டப்பட்டது. போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் உளவுத்துறை அளித்த தகவல்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டன. நடப்பு ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முறையாக நடத்துவது உட்பட பல்வேறு சவால்களை எதிர்கொள்ள காவல் துறை முழுமையாக தயார் நிலையில் உள்ளது.

நம் தாய்த் தமிழ்மொழியின் பெருமையை வளர்ப்பது இந்த அரசின் முதன்மைக் குறிக்கோளாகும். தமிழ்மொழி பேசப்படும் பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடியவர்களின் முயற்சிகளை கௌரவிக்கும் வகையில், எல்லைக் காவலர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை 4,500 ரூபாயிலிருந்து 5,500 ரூபாயாகவும், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை 3,500 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாகவும், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. கீழடி அகழ்வாராய்ச்சியில், சங்ககாலப் பண்பாட்டின் செழுமையான தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. இந்த முக்கிய தொல்பொருட்கள் தற்போது தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டு வரும் உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்தில் காட்சிப்படுத்தப்படும். இதுவரை, சொற்குவை வலைதளத்தில் 3,85,788 சொற்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. மாநில ஆட்சிமொழி (சட்டம் இயற்றும்) ஆணையம், 38 மத்தியச் சட்டங்களை தமிழில் மொழியாக்கம் செய்ததுடன், இதுவரை, 10,000க்கும் மேற்பட்ட சொற்களைத் தொகுத்து, தமிழில் ஒரு சட்ட அகராதியைத் தயாரித்து வருகின்றது.

மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் புகழிற்குப் பெருமை சேர்க்கும் வகையில், அவர்களின் நினைவு மண்டபம் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டுள்ளது. மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரின் 'வேதா நிலையத்தை', அரசு கையகப்படுத்தி, ஒரு சிறப்புச் சட்டத்தின் மூலம், நினைவு இல்லமாக மாற்றி, அதுவும் திறக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில், மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் மகத்தான பங்களிப்பைப் போற்றும் வகையில், தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் வளாகத்திற்கு டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகம் என பெயர் சூட்டப்பட்டது. மேலும், அவ்வளாகத்தில் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் 9 அடி உயரம் கொண்ட வெண்கலத் திருவுருவச் சிலை நிறுவப்பட்டது.

மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

கோவிட்–19 பெருந்தொற்று நோயாலும், அதன் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், பொருளாதார வளர்ச்சியில் கணிசமான மந்தநிலையுடன் 2020–2021ஆம் நிதியாண்டு தொடங்கியது. வருவாய் வரவினங்கள் கடுமையாகக் குறைந்து, கூடுதல் செலவினங்கள் பெரிய அளவில் ஏற்பட்ட போதிலும், இந்தக் கடினமான காலகட்டத்தில் நிதி நிலைமையை அரசு நேர்த்தியாக நிருவகித்தது.

கோவிட்–19 மீட்டெடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கான செலவினங்கள், சுகாதார உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் மூலதனச் செலவினங்கள் ஆகியவை முன்னுரிமை அடிப்படையில் அதிகரிக்கப்பட்டன. கோவிட்–19 நிவாரணம் மற்றும் மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்காக, இதுவரை ரூ.13,208 கோடி, தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து தமிழ்நாடு அரசு செலவிட்டுள்ளது. பிற மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழ்நாடு அரசு, அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தை தாமதப்படுத்தவோ, குறைக்கவோ இல்லை. உரியநேரத்தில், செலவு குறைந்த கடன்களைப் பெற்றதன் மூலம், கோவிட்–19 பெருந்தொற்று நோயின் கடுமையான தாக்கத்திலிருந்து தமிழ்நாட்டு மக்களை இவ்வரசு பாதுகாத்துள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தியதன் விளைவாக, மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை சில மாதங்களுக்கு வழங்கப்படாமல் இருந்தது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்தில், தமிழ்நாடு முக்கியப் பங்கு வகித்தது. மிகவும் கடுமையான நிதி நிலைமை உள்ள இந்த ஆண்டில் கூட, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக, இதுவரை ரூ.13,300 கோடி இந்த அரசு பெற்றுள்ளது. இத்தொகையில், சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்தால் செயல்படுத்தப்படும் உத்தியின்படி, இழப்பீட்டுக்குப் பதிலாக ரூ.4,890 கோடி கடனும் அடங்கும்.

2017–2018ஆம் ஆண்டில், மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்ட ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி ஒதுக்கீடு தொடர்பான பிழையை சரிசெய்து, இறுதியாக ரூ.4,321 கோடி இந்த ஆண்டு தமிழ்நாடு பெற்றது மனநிறைவு அளிக்கின்றது.

கோவிட்–19 பெருந்தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து, பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளுக்கு உதவுவதற்காகவும், வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவும், மேலும், பல்வேறு நடவடிக்கைகளை பரிந்துரைக்க, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரும், பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் முன்னாள் தலைவருமான டாக்டர் சி. ரங்கராஜன் தலைமையில் ஒரு உயர்மட்ட வல்லுநர் குழுவை அரசு நியமித்தது. உயர்மட்டக் குழுவின் பல்வேறு பரிந்துரைகளின் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகளின் மூலம், பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு, பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கான வலுவான அறிகுறிகள் இப்பொழுதே காணப்படுகின்றன.

பெருந்தொற்றுநோயை எதிர்கொள்வதற்காக, மருத்துவ உபகரணங்கள், பாதுகாப்புக் கவச உடைகள் மற்றும் மருந்துகள் தயாரிப்பு போன்ற முக்கியமான துறைகளில் முதலீட்டை ஊக்குவிப்பதற்காகவும், தொற்றுநோய்க்குப் பின்னர் இடம்பெயர விரும்பும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், இந்த அரசு பல்வேறு முயற்சிகளை முனைப்பாக மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக, தொற்றுநோய்க் காலத்தின் போதே, வரலாற்றுச் சாதனையாக, 73 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வாயிலாக, 1,00,721 நபர்களுக்கு

வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில், ரூ.60,674 கோடி மதிப்பிலான முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது.

2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில், CARE Ratings நிறுவனத்தின் அறிக்கையின்படி, இந்திய அளவில் முதலீட்டுத் திட்டங்களில் அதிகப் பங்கைப் பெற்று (16 சதவீதம்), முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

கோவிட்–19 பெருந்தொற்றுநோய்க் காலத்தின் முதல் இரண்டு காலாண்டுகளில், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது என்று ‘பிராஜெக்ட்ஸ் டுடே’ நிறுவனமும் குறிப்பிட்டுள்ளது. முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டின் மீது தொடர்ந்து வைத்திருக்கும் நம்பிக்கையை இது பிரதிபலிக்கிறது. மேலும், மாநிலத்தின் வலுவான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தை இது உருவாக்கும்.

2020ஆம் ஆண்டில், ‘நிவர்’ மற்றும் ‘புரெவி’ ஆகிய இரண்டு புயல்களால் தமிழ்நாடு தாக்கப்பட்டது. மேலும், ஜனவரி மாதத்தில் பருவம் மாறி பெய்த கனமழையால் அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்கள் பெருமளவில் சேதமடைந்தன. அரசினால் மேற்கொள்ளப்பட்ட முனைப்பான நடவடிக்கைகளால், உயிர் இழப்புகள் மற்றும் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுவது வெகுவாகக் குறைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யும் வகையில், எந்த ஒரு இடையூறும் இல்லாமல் அத்தியாவசிய சேவைகள் வழங்கப்பட்டன. அரசின் இந்த நடவடிக்கைகள், ஊடகங்கள் மற்றும் பொது மக்களிடையே, பெரும் பாராட்டைப் பெற்றன. நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்ததில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிகு தலைமையை நான் பாராட்டுகிறேன். இரண்டு புயல்களால் ரூ.3,750 கோடி மற்றும் ரூ.1,514 கோடி மதிப்பில் ஏற்பட்ட சேதங்களை, விரிவாக விளக்கக் கூடிய இரண்டு கோரிக்கை மனுக்களை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு அளித்துள்ளது. மேலும், இந்த நிதியை விரைவாக வழங்குமாறு மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துகிறோம். மத்திய அரசின் நிதி விடுவிப்பிற்குக் காத்திருக்காமல், பயிர் சேதமடைந்த அனைத்து விவசாயிகளுக்கும், உச்சவரம்பின்றி நிவாரணத் தொகையை மாநில அரசு வழங்கியுள்ளது. நெல்லுக்கு இடுபொருள் மானியமாக எக்டேர் ஒன்றுக்கு 20,000 ரூபாயும், மானாவாரிப் பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 10,000 ரூபாயும், இந்த அரசு நிவாரணத் தொகையாக வழங்கியது.

இரண்டு புயல்கள் மற்றும் ஜனவரி மாதத்தில் பருவம் மாறி பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட 16.78 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு மொத்தம் 1,715 கோடி ரூபாய் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகின்றது. உரிய நேரத்தில் இந்த அரசு நிதி உதவியினை வழங்கியதால் விவசாயிகளின் துயர் துடைக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கிலிருந்து மீண்டு வருவதற்கு உதவியாக, மாநிலம் முழுவதும் அரிசி குடும்ப அட்டையைக் கொண்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.1,000 நிதி உதவி வழங்கப்படும் என 2020ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இதனையடுத்து, 2020ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தீவிர ஊரடங்கை அறிவித்தபொழுது, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள் மற்றும் மதுரை மாநகரத்தில் உள்ள 28,31,535 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதல் நிதியுதவி ரொக்கமாக வழங்கப்பட்டது.

அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் 23,13,957 உறுப்பினர்களுக்கு, ரூ.476 கோடி நிதியுதவி ரொக்கமாக வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, பெருந்தொற்றுநோய், இரண்டு புயல்கள் மற்றும் ஜனவரி மாதத்தில் பருவம் மாறிப் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு உதவும் விதமாக, அரிசி குடும்ப அட்டையுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும், ரூ.2,500 நிதியுதவியுடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. மாநிலத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களும் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு உதவியதுடன், பொருளாதாரத்திற்கு மிகவும் தேவையான நுகர்வு ஊக்கத்தையும் இது அளித்துள்ளது. டாக்டர் சி. ரங்கராஜன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் உரிமைகளை, இந்த அரசு தொடர்ந்து தீவிரமாகப் பாதுகாக்கும். காவேரி நதி நீர் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பையும் செயல்படுத்த வேண்டும் என்ற இந்த அரசு எடுத்த முழுமுயற்சியின் காரணமாக, மத்திய அரசு, ‘காவேரி நதி நீர் மேலாண்மை ஆணையம்’ மற்றும் ‘காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழு’ ஆகியவற்றை உள்ளடக்கி ‘காவேரி நதி நீர் மேலாண்மைத்

திட்டம் 2018–ஐ' மத்திய அரசிதழில் 01.06.2018 அன்று வெளியிட்டது. மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை மீறியும், தமிழ்நாடு அரசின் அனுமதியின்றியும், காவேரி மற்றும் அதன் கிளை நதிகளின் குறுக்கே யாதொரு நீர்த்தேக்கத்தையோ அல்லது திசை திருப்பும் அமைப்புகளையோ கருநாடக அரசு கட்டுவதை அனுமதிக்கக்கூடாது என்று மத்திய அரசிடம் நாங்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம். மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி, கருநாடக அரசால் முன்மொழியப்பட்ட மேகதாது திட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று மத்திய அரசை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி, பெரியாறு ஆற்றின் குறுக்கே எந்தவொரு புதிய அணையையும் கட்டுவதற்கு, கேரள மாநிலத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துகிறோம். முல்லைப் பெரியாறு அணையினை வலுப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளத் தேவையான அனுமதிகளை விரைந்து வழங்குமாறு மத்திய அரசையும், கேரள அரசையும் இந்த அரசு கேட்டுக்கொள்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் மற்றும் ஏனைய நதி நீர்ப் பிரச்சினைகளில் இணக்கமான உடன்பாட்டை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள், அலுவலர்கள் மட்டத்தில் முன்னேற்றத்தில் உள்ளது. தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவின்படி, பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகள் சட்டத்திலுள்ள விதிமுறைகளின் கீழ், தீர்ப்பாயம் ஒன்றை அமைக்குமாறு மத்திய அரசிடம் நாங்கள் கோரியுள்ளோம்.

தமிழ்நாட்டின் அருகியுள்ள நீர்வளங்களைப் பாதுகாப்பதிலும், திறம்படப் பயன்படுத்துவதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உரிய கவனம் செலுத்துகின்றது. ஜல் சக்தி அமைச்சகத்தால், சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக, 2019ஆம் ஆண்டிற்கான 'தேசிய நீர் விருது' தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நீர்வளப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட, பெரும் புகழ்வாய்ந்த குடிமராமத்து திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு, இந்த விருது ஒரு சிறப்பான அங்கீகாரமாகும். 2017–2018ஆம் ஆண்டு முதல், குடிமராமத்து திட்டத்தின் கீழ், ரூ.1,418 கோடி மதிப்பீட்டில், 6,211 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நீர்ப்பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதற்கான இந்த அரசின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன், ரூ.2,639 கோடி மதிப்பீட்டில், கல்லணைக் கால்வாய் பாசன அமைப்பை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கீழ் பவானி பாசன அமைப்பை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தை ரூ.933 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த, அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின் மூலம், 2.47 இலட்சம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெறும். காவேரி ஆற்றின் குறுக்கே, ரூ.406 கோடி மதிப்பீட்டில் நஞ்சை–புகலூர் தடுப்பணைத் திட்டத்தின் அடிக்கல் நாட்டப்பட்டதன் மூலம், 'நடந்தாய் வாழி காவேரி திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. காவேரி – குண்டாறு திட்டத்தின் முதல் கட்டமாக, காவேரி – தெற்கு வெள்ளாறு இணைப்பின் பணிகள் விரைவில் தொடங்கப்படும். நீண்ட காலமாக நிலுவையிலிருந்த அத்திக்கடவு – அவிநாசி நீரேற்றுப் பாசனத் திட்டத்திற்கு ரூ.1,652 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் முதற்கட்டப் பணிகள் நிறைவேற்றப்படும். இதேபோன்று, மேட்டூர் அணையின் உபரி நீரைக் கொண்டு, 100 வறண்ட ஏரிகளை நிரப்புவதற்காக, சரபங்கா நீரேற்றுப் பாசனத் திட்டப் பணிகள் ரூ.565 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 2021ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் இப்பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக, பல்வேறு செயல்திறன் மிக்க நடவடிக்கைகளை, இந்த அரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தின் வாயிலாக, காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள

கோவிட்–19 பெருந்தொற்று நோய்க் காலத்தின் முதல் இரண்டு காலாண்டுகளில், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது என்று 'பிராஜெக்ட்ஸ் டுடே' நிறுவனமும் குறிப்பிட்டுள்ளது.

வேளாண் விளைநிலங்களும், விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தச் சட்டத்தின் மூலம், காவேரி டெல்டா பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியதால், அவருக்கு வழங்கப்பட்ட ‘காவேரி காப்பாளன்’ என்ற பட்டத்துக்குப் பொருத்தமானவர் ஆகிறார்.

8 ஆண்டுகளுக்குப் பிறகு, குறுவை நெல் சாகுபடிக்காக, உரிய நாளான ஜூன் 12ஆம் தேதியன்றே, மேட்டூர் அணை திறக்கப்பட்டது. பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் இழப்பிற்காக, ரூ.9,312 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களில் மறுசீரமைக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ள நிலையில் கூட, நமது மாநிலத்தில் உள்ள விவசாயிகள், பயிர்க் காப்பீட்டின் பாதுகாப்பைத் தொடர்ந்து பெறவேண்டும் என்பதற்காக, 2020–2021ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த கூடுதல் நிதிச் சுமையை இந்த அரசு ஏற்று வருகிறது. இந்தியாவிலேயே, நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக, 2019–2020ஆம் ஆண்டில், ரூ.1,112 கோடி மானியத்துடன் 6.52 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு முதல் இந்த அரசின் முயற்சிகளால், ஊரகப் பொருளாதாரத்தின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில், கால்நடைத் துறையின் பங்கு பெருமளவில் அதிகரித்துள்ளது. 2011ஆம் ஆண்டு முதல், மொத்தம் 1,06,277 கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு 1,06,277 கறவை மாடுகளும் 12,44,010 கிராமப்புற ஏழைக் குடும்பங்களுக்கு 49,76,040 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டு முதல், 3,60,620 ஏழைக் குடும்பங்களுக்கு 1,09,40,500 கோழிகள் வழங்கப்பட்டுள்ளன. பெருகியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, தீவனப் பயிர், தீவனம், உயர்தர கால்நடைப் பராமரிப்பு மற்றும் நிலையான சந்தைப்படுத்துதல் போன்றவை மேம்படுத்தப்பட்டு, அவை தொடர்ந்து கிடைக்க உறுதி செய்யப்பட்டுள்ளது. தலைவாசல், தேனி மற்றும் உடுமலைப்பேட்டையில் மேலும் மூன்று கால்நடை மருத்துவக் கல்லூரிகளை அரசு நிறுவியுள்ளது. இந்த அரசின் ஒரு முக்கிய சாதனையாக, சேலம் மாவட்டம், தலைவாசலில் ‘கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்’ நிறுவப்பட்டது. இதன் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இந்நிலையம் மிக விரைவில் செயல்படத் தொடங்கும்.

நமது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில், நமது மீனவர்களின் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடற்பகுதியில் அமைதியாக மீன்பிடித்துக் கொண்டிருந்தபொழுது, இலங்கை கடற்படையினர் அவர்களுடைய கப்பலைக் கொண்டு வேண்டுமென்றே தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகில் மோதியதன் விளைவாக, நான்கு தமிழக மீனவர்கள் தங்களின் இன்னுயிரை இழந்துள்ளனர்.

இச்செயலை இந்த அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. அதே வேளையில், இம்மீனவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.10 இலட்சம் நிவாரணமும், வாரிசுதாரர்களுக்கு அரசு சார்ந்த பணியிடமும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தை இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும்படி மத்திய அரசிடம் நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். இலங்கை நாட்டின் காவலில் இருக்கும் மீதமுள்ள 12 மீனவர்களையும் மீட்டெடுக்க, அரசு தொடர்ந்து தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டின் அருகியுள்ள நீர்வளங்களைப் பாதுகாப்பதிலும், திறம்படப் பயன்படுத்துவதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உரிய கவனம் செலுத்துகின்றது. ஜல் சக்தி அமைச்சகத்தால், சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக, 2019ஆம் ஆண்டிற்கான ‘தேசிய நீர் விருது’ தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

200 கடல் மைல்கள் பரப்பளவில் உள்ள பிரத்தியேகமான பொருளாதார மண்டலத்தை தமிழ்நாடு மீனவர்கள் பயன்படுத்த ஏதுவாக, ஆழ்கடலில் மீன்பிடித்தலை ஊக்குவிப்பது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் தற்போது கட்டுமானத்தில் உள்ளன. மேலும், மீன்பிடி துறைமுகங்கள், மீன் தரையிறங்கும் தளங்கள், குளிர் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகள் உள்ளிட்ட கரையோர உட்கட்டமைப்புகள் விரைவாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. தேங்காய்ப் பட்டணத்தில் ரூ.97 கோடி மதிப்பீட்டிலும், மூக்கையூரில் ரூ.129 கோடி மதிப்பீட்டிலும், பூம்புகாரில் ரூ.178 கோடி மதிப்பீட்டிலும் மீன்பிடித் துறைமுகங்களின் பணிகளும், குந்துக்கலில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் மீன் தரையிறங்கும் தளத்தின் பணிகளும் நிறைவடைந்துள்ளன. திருவொற்றியூர் குப்பத்தில் ரூ.200 கோடி மதிப்பீட்டிலும், தரங்கம்பாடியில் ரூ.120 கோடி மதிப்பீட்டிலும், வெள்ளப்பள்ளத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டிலும், முதுநகரில் ரூ.100 கோடி மதிப்பீட்டிலும், மீன்பிடித் துறைமுகங்களின் கட்டுமானப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அழகன் குப்பம், ஆலம்பறைக் குப்பம் மற்றும் ஆற்காட்டுத் துறையில் ரூ.385 கோடி மதிப்பீட்டில், மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்காக நிதியுதவி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆழ்கடலில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இஸ்ரோவின் உதவியுடன் செயற்கைக்கோள் அடிப்படையிலான தடையற்ற தகவல் தொடர்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. மீன்வளத் துறையின் கீழ், 112 காவல் பணியாளர்களைக் கொண்ட 'கடல் அமலாக்கப் பிரிவு' உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வேலை தேடி இடம் பெயரும் ஏழைக் குடும்பங்கள் ரேஷன் பொருட்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இத்திட்டம் பெருமளவில் பயனளிக்கும். கோவிட் நிவாரண நடவடிக்கைக்காக கூடுதலாக 19.95 இலட்சம் மெட்ரிக் டன் விலையில்லா அரிசி, அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரை, மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் உரித்தான, பருப்பு, பாமாயில் மற்றும் சர்க்கரை ஆகியவை விலையில்லாமல் வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைகளுக்காக மாநில அரசு கூடுதல் மானியமாக ரூ.5,402 கோடி செலவை ஏற்றுக்கொண்டது.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். 2019ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 81 திட்டங்கள் வணிக உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. மேலும், 191 திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல்பாட்டிலுள்ளன.

2019ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்குப் பின்னர், மேலும் 149 திட்டங்களில், ரூ.1,06,664 கோடி மதிப்பில் முதலீட்டை ஈர்த்து, 2,42,705 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை தமிழக அரசு அளித்துள்ளது. கோவிட்–19 பெருந்தொற்றுக் காலத்திலும், இத்தகைய பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்த்ததில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி ஈடுபாட்டையும், முனைப்பான முயற்சிகளையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். வளர்ந்துவரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக, மின்சார வாகனக் கொள்கை மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கையை அரசு அறிவித்துள்ளது. இவை இரண்டும் மேலும் முதலீடுகளை ஈர்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. தொழில் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் விதமாக, 'புதிய தொழில் கொள்கைக்கு' அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக்கொள்கை விரைவில் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தொழில்முனைவோருக்கான நாற்றங்காலாக விளங்குவது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலைவாய்ப்பு அளிப்பவையாகவும் திகழ்கின்றன. தமிழ்நாட்டில், ரூ.2,73,241 கோடி

கோவிட்–19 பெருந்தொற்றுக் காலத்திலும், பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்த்ததில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி ஈடுபாட்டையும், முனைப்பான முயற்சிகளையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

முதலீட்டுடன், 1.52 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய, 23.60 இலட்சம் பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்கள் உள்ளன. அனைத்துத் தரப்பினரிடமும் கலந்தாலோசித்து, 'புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் கொள்கை' இறுதி செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

கோவிட்–19 பெருந்தொற்று நோயிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீண்டு வருவதற்கு உதவும் விதமாக, பல்வேறு வகையான மானியங்களை, அரசு முன்கூட்டியே வழங்கியது.

மேலும், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைத் திறம்பட ஒருங்கிணைத்து, இந்திய அரசின் 'அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்தின்' மூலம் தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயனடைவதை உறுதி செய்துள்ளது. அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ், கடன்கள் பெறுவதை எளிதாக்குவதற்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும், சொத்து ஆவணங்களை அடமானம் செய்யும் (சமமான அடமானங்கள்) பத்திரப் பதிவு மீதான முத்திரைத் தீர்வையை செலுத்துவதிலிருந்து அரசு, மார்ச் 31, 2021 வரை விலக்களித்துள்ளது. மேலும், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான பதிவுக் கட்டணத்தை 1 சதவிகிதத்திலிருந்து 0.1 சதவிகிதமாகக் குறைத்துள்ளது. நிறுவனக் கடன் பெறுவதை மேலும் எளிதாக்குவதற்காக, 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் அரசு திருத்தம் மேற்கொள்ளும். இதன்படி, குறிப்பிட்ட காலக் கடன்கள் மற்றும் நடைமுறை மூலதனக் கடன்களைப் பெறும் பொருட்டு, பத்திரம் பதிவு செய்ய, பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு கடன் பெறுபவர்களும் கடன் வழங்குபவர்களும் நேரில் செல்வதைத் தவிர்த்து, சொத்து ஆவணங்களை அடமானம் செய்து பத்திரங்களை இணையவழியில் பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்படும்.

இந்தக் கொரோனா கால நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு ஏதுவாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குமாறு வங்கியாளர்களை வலியுறுத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான வங்கியாளர்கள் சிறப்புக் குழுக் கூட்டத்தினை கூட்டினார். இந்நடவடிக்கைகளின் காரணமாக, இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட, அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அதிக அளவில் பயனடைந்துள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு சிறந்த நீண்டகாலக் கடன் வழங்கும் நிறுவனமாகத் திகழ்வதற்கும், அதன் செயல்பாடுகளை விரிவாக்குவதற்கும், இதுவரை நிறுவனக் கடன் பெறாத குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுகின்ற வகையில், தமிழ்நாடு அரசு, இக்கழகத்தில், ரூ.1,000 கோடி மூன்று வருடங்களில் முதலீடு செய்யும்.

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவை வழங்குவதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இதற்காக, 2020ஆம் ஆண்டிற்கான டிஜிட்டல் இந்தியா விருதுகளில் 'டிஜிட்டல் ஆளுமையில் சிறந்த மாநிலம்' என்ற பிரிவில் தங்க விருதினை இந்திய குடியரசுத் தலைவரிடமிருந்து, தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. பின்தள கணினிமயமாக்கல் முறையில், மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ள 'ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்புத் திட்டம்' உட்பட, பெரிய அளவிலான தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் மின்னாளுமை கட்டமைப்பிற்குள் முன்னணி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதை 'தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கொள்கை' நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கட்டமைப்பின் மூலம் பல்வேறு

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவை வழங்குவதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இதற்காக, 2020ஆம் ஆண்டிற்கான டிஜிட்டல் இந்தியா விருதுகளில் 'டிஜிட்டல் ஆளுமையில் சிறந்த மாநிலம்' என்ற பிரிவில் தங்க விருதினை இந்திய குடியரசுத் தலைவரிடமிருந்து, தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

அரசு சேவைகள் தடையின்றியும் பாதுகாப்பாகவும் வழங்கப்படும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் முதலீடுகளுக்கு ஏற்றதொரு மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதே, 'தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறிமுறைசார்ந்த செயற்கை நுண்ணறிவுக் கொள்கையின்' குறிக்கோளாகும்.

அண்மையில் வெளியிடப்பட்ட 'இணையப் பாதுகாப்புக் கொள்கை' மூலம், தரவுகளின் உயர்தரப் பாதுகாப்பையும் தனியுரிமையையும் உறுதி செய்வதில் அரசு உறுதிபூண்டுள்ளது. மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்கு வருவாய் கிராமங்களில் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள்ளும், எஞ்சிய கிராமங்களில் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள்ளும் 'பாரத்நெட் திட்டம்' செயல்படுத்தப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் அதிவேக மற்றும் அளவிடத்தக்க அலைவரிசையை வழங்குவதற்கு ஏதுவாக, தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு, தமிழ்நெட் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ஒளிபரப்பு உட்கட்டமைப்புடன் பாரத்நெட்டை இணைப்பதன் மூலம், ஒரு ஒருங்கிணைந்த மின்னணு சேவை விநியோக தளமான 'ஒருங்கிணைந்த மின்னணு உட்கட்டமைப்பு' ஏற்படுத்தப்படும்.

அனைத்து நுகர்வோருக்கும் தரமான, நம்பகத்தன்மை வாய்ந்த மின்சாரத்தை வழங்குவது தமிழ்நாடு உட்கட்டமைப்பின் ஒரு அடிப்படைக் கூறாகும். தமிழ்நாடு ஒரு மின் மிகை மாநிலமாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில், 32,149 மெகாவாட் மொத்த மின் உற்பத்தித் திறனை அடைவதற்கு, 15,745 மெகாவாட் உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றில், 16,166 மெகாவாட் மின்சாரம், நீர் மின்சக்தி உட்பட, புதுப்பிக்கத்தக்க மின்சக்தி ஆற்றலாகும். நம்பகமான மின்சக்தி வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு, தொடரமைப்பு மற்றும் பகிர்மான வலையமைப்பின் கொள்திறனை மேம்படுத்துவதற்காக, பெருமளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் உயர்தர சாலைக் கட்டமைப்பு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கின்றது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக, மேம்பாலப் பணிகளும், பல்வழிச் சாலை மேம்பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிப்பாளையம் வரை ரூ.1,620 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைக்கப்பட உள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன் சென்னை எல்லை சுற்றுச்சாலை திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன், சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம் ஆகிய திட்டங்கள் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சாலைப் பாதுகாப்பிற்கு மாநில அரசு முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளிப்பதனால், மாநிலத்தில் விபத்துகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகின்றது. 2016ஆம் ஆண்டில் 71,431 ஆக இருந்த மொத்த விபத்துகளின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டில் 45,489 ஆகவும், 2016ஆம் ஆண்டில் 17,218 ஆக இருந்த உயிரிழப்பிற்கு காரணமான விபத்துகளின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டில் 8,060 ஆகவும் குறைந்துள்ளன. உயிரிழப்பிற்கு காரணமான விபத்துகளைக் குறைப்பதில் சிறந்த மாநிலத்திற்கான விருதினை 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு பெற்றுள்ளது.

குறைந்த விலை பேருந்துக் கட்டணத்துடன், பேருந்து சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோரின் பங்கினை மேலும் அதிகரிப்பதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. கோவிட்–19 பெருந்தொற்று நோயின் விளைவாக, பேருந்துப் போக்குவரத்தை இயக்குவதில் தீவிரக் கட்டுப்பாடுகள் இருந்தன. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன், பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடு இயல்பு நிலைக்கு மெல்லத் திரும்பி வருகின்றன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம், கட்டம்–I இன் கீழ், வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரையிலான நீட்டிப்பு வழித்தடத்தில் பயணிகள் சேவை விரைவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இம்மாத இறுதியில் தொடங்கி வைக்கப்படும். மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால்,

ரூ.61,843 கோடி மதிப்பீட்டில், 118.9 கி.மீ. நீளம் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதியை ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகியவை வழங்குகின்றன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு 50:50 பகிர்வு அடிப்படையில், மத்திய அரசு தங்களுடைய பங்கு மூலதனத்திற்கு ஒப்புதலை வழங்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

கோவிட்–19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில், தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் முன்னணி வகிக்கின்றன. மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் வெளிப்புற நிதியுதவி முகமைகள் மூலம் நிதியளிக்கப்பட்ட பல்வேறு நகர்ப்புற உட்கட்டமைப்புத் திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் நீர்நிலைகளை மீள்நிரப்புவதற்காக, கழிவுநீரை மறுசுழற்சி செய்து, மறுபயன்பாடு செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இயங்கி வரும் இரண்டு 45 எம்.எல்.டி. மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு நிலையங்களைத் தவிர, கூடுதலாக பெருங்குடி ஏரியையும் போரூர் ஏரியையும் மீள்நிரப்புவதற்காக, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கத்தில், 10 எம்.எல்.டி. திறனுடைய இரண்டு மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களுக்குத் தரமான வீட்டு வசதிகளை வழங்குவதற்கு இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஊரகப் பகுதியில் வீடற்ற ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் கான்கிரீட் கூரையுடன் கூடிய ஒரு வீடும், நகர்ப் பகுதியில் வசிக்கும் வீடற்ற ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கு அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு வீடும் கட்டித் தரப்படும். மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் கட்டி முடிக்கும் தருவாயிலிருக்கும் 2,57,925 வீடுகளின் கட்டுமானப் பணிகளை விரைவாக முடிக்க உதவும் வகையில், பிரதம மந்திரியின் வீட்டுவசதித் (ஊரகம்) திட்டத்தின் கீழ், வீடு ஒன்றிற்கு சிறப்பு கூடுதல் ஒதுக்கீடாக ரூ.70,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனுடன், பிரதம மந்திரியின் வீட்டு வசதித் (ஊரகம்) திட்டத்தின் கீழ், வீடு ஒன்றிற்கு, இந்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலை 1.20 இலட்சம் ரூபாய்க்குப் பதிலாக, தமிழ்நாட்டில் வீடு ஒன்றிற்கு மொத்தச் செலவு 2.40 இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், மாநில அரசின் பங்கு 1.68 இலட்சம் ரூபாய் ஆகும். நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுவசதிகளை மேம்படுத்துவதற்காக, 'தமிழ்நாடு நகர்ப்புற திறனுக்கேற்ற வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கொள்கை' வகுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுவசதிகளை ஏற்படுத்துவதற்காக, உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து, அரசு நிதியுதவியை திரட்டியுள்ளது. விதிகளை எளிமைப்படுத்தியதாலும், அதிகாரங்களைப் பகிர்ந்தளித்ததாலும், திட்ட வடிவமைப்பிற்கு அனுமதி வழங்கும் நடைமுறை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின் மூலம், 39,939 மனைப் பிரிவுகள் மற்றும் 21,86,101 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. பெருவாரியான மக்களின் கோரிக்கையின்படி, விடுபட்டுள்ள இனங்களுக்கு, 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் கால அளவு 28.02.2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

காடுகளைப் பாதுகாப்பதற்கும், மரங்களின் பரப்பளவினை அதிகரிப்பதற்கும் இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. 2019ஆம் ஆண்டின் இந்திய வன நிலை அறிக்கையின்படி, 2017 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கு இடையே, தமிழ்நாட்டில் 8,302 எக்டேர் அளவில் வனங்களின் பரப்பளவு

இணைய வழி வகுப்புகளில் மாணாக்கர்கள் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் மாணாக்கர்கள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி உதவித்தொகை பெறும் மாணாக்கர்கள் என ஆக மொத்தம், 9.69 இலட்சம் மாணாக்கர்களுக்கு, நான்கு மாதங்களுக்கு, நாளொன்றிற்கு 2 ஜி.பி. விலையில்லா தரவு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ளது மற்றும் 159 சதுர கி.மீ அளவில் மரங்களின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, காடுகள் மற்றும் மரங்களின் பல்லுயிர்த் தன்மையில் இரண்டாவது நிலையை நமது மாநிலம் அடைந்துள்ளது. வனவிலங்குகளின் வாழ்விடத்தைப் பாதுகாத்து வருவதன் விளைவாக, 2014ஆம் ஆண்டில் 229 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, 2018ஆம் ஆண்டில் 264 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் மனித வளத்தை, மாநிலத்தின் வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, இளைஞர்களின் திறனை முழுமையாக மேம்படுத்த வேண்டும்.

எனவே, நம் மாநிலத்தில் முன்னுரிமை பெற்ற முதலீடாக கல்வி தொடர்ந்து விளங்கி வருகிறது. 2017–2018ஆம் ஆண்டிலிருந்து, 19 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 5 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 3 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் கூடுதலாகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் தரத்தை உயர்த்துவதற்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இணைய வழி வகுப்புகளில் மாணாக்கர்கள் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் மாணாக்கர்கள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி உதவித்தொகை பெறும் மாணாக்கர்கள் என ஆக மொத்தம், 9.69 இலட்சம் மாணாக்கர்களுக்கு, நான்கு மாதங்களுக்கு, நாளொன்றிற்கு 2 ஜி.பி. விலையில்லா தரவு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தொடர்ந்து, இடைவிடாமல், கல்வி கற்பதை உறுதிசெய்வதே, நடப்புக் கல்வியாண்டின் சவாலாகும். மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய சத்துணவு, பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட சலுகைகள் இப்பெருந்தொற்றுக் காலத்திலும் வழங்கப்பட்டு வருகிறது. கல்வி தொலைக்காட்சி மற்றும் 10 தனியார் தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு வாயிலாக, மாணவர்கள் பாடங்களை கற்கும் வண்ணம், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விலையில்லா மடிக்கணினிகள் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட மடிக்கணினியில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்ட பாடங்கள் வாயிலாகவும், பல்வேறு இணையதளங்கள் வாயிலாகவும், மின்னணு தொகுப்பில் பாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்விக்கான இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கையின் விளைவுகளை ஆய்வு செய்வதற்காக, தமிழ்நாடு அரசு இரண்டு குழுக்களை அமைத்துள்ளது. இருமொழிக் கொள்கையை தொடர்ந்து பின்பற்றுவதில் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

திறன் மேம்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவத்தை தொடர்ந்து அளித்து வருகிறது. வாகனம், வாகன உதிரி பாகங்கள், இயந்திரக் கருவிகள், மருத்துவமனை மற்றும் சுகாதார சேவைகள், போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் பரிமாற்றம் ஆகிய துறைகளைச் சார்ந்த உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் முழுமையாகச் செயல்பட்டு வருகின்றன. கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்புத் துறைகளில் உயர்திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவுவதற்கு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களுக்கு, 2013–2014ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்திற்காக தமிழ்நாடு அரசு, கூடுதலாக தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து, மொத்தமாக ரூ.682 கோடி வழங்கியுள்ளது.

கோவிட்–19 பெருந்தொற்று தாக்கியபோது, புலம்பெயர் தொழிலாளர்களைக் கையாளுவதில் தமிழ்நாடு அரசு பரிவுடன் நடந்துகொண்டது. மாநிலம் முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான கட்டுமானம் மற்றும் ஏனைய தொழிலாளர்களுக்கு இலவச உணவு வழங்கப்பட்டது. 22,74,582 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் மாநிலங்களுக்கு இடையேயான புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அத்தியாவசியப்

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலை தொழிலாளர்கள் நலனை மேம்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு 30.12.2020 அன்று தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அமைத்தது.

பொருட்கள் வழங்கப்பட்டன. சிறப்பு இரயில் சேவைகள் மூலம் 4,03,042 புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பிச் செல்வதற்கான செலவை இந்த அரசு ஏற்றுக்கொண்டது. மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர் தொழிலாளர்களுக்காக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை, தமிழ்நாட்டிலுள்ள 3,16,368 மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர் தொழிலாளர்கள் பற்றிய தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகித்து வரும் இப்புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை பரிவுடன் செயல்படுத்தியதனால், ஊரடங்கு கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர், ஏராளமான புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களுடைய பணிகளுக்காக தமிழ்நாட்டிற்கு மீண்டும் திரும்பியுள்ளனர்.

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலை தொழிலாளர்கள் நலனை மேம்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு 30.12.2020 அன்று தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அமைத்தது.

பணிபுரியும் பெண்களின் நலனை மேம்படுத்த, இந்த அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது. முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை அமல்படுத்தியதன் மூலம், குழந்தை பாலின விகிதம் அதிகரித்து வருகிறது. சட்ட விதிகளை திறம்பட நடைமுறைப்படுத்தியதன் மூலம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைக் குறைக்க, சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பணிபுரியும் பெண்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான உறைவிட வசதிகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் கீழ் மாநிலம் முழுவதும் பயனடைந்து வருகிறது. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதற்கான இலக்காக ரூ.14,000 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ், 2,53,457 பயனாளிகளுக்கு உதவும் விதமாக ரூ.300 கோடி செலவில், 120 வட்டாரங்களில் சிறப்பு கோவிட் நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், திருமணமாகாத பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் ஆகியோரைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. சமூகப் பாதுகாப்பு மற்றும் முதியோர் ஓய்வூதியத்தை 33,60,021 நபர்கள் பெற்று வருகின்றனர். பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007 திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் கீழ், பராமரிப்பு உதவித்தொகை கோரிய 3,966 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

5 உட்கூறுகள் அடங்கிய, மூத்த குடிமக்களுக்கான மாநிலச் செயல்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

அனைத்து சமூகப் பொருளாதார நடவடிக்கைகளிலும் மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பை உறுதி செய்வதில் அரசு உறுதிபூண்டுள்ளது. ஊரடங்கு காலத்தில் மாற்றுத்திறனாளிகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. மேலும், பராமரிப்பு உதவித் தொகை இரண்டு மாதங்களுக்கு முன்பே வழங்கப்பட்டது.

தேசிய அடையாள அட்டை பெற்ற அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் சிறப்பு ரொக்க உதவியாக ரூ.1,000 வழங்கப்பட்டது. மேலும், ரூ.5.31 கோடி செலவில் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பெட்டகங்களும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன. அனைத்து பொது அலுவலகங்களிலும் தடையில்லா உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான தணிக்கைப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு

அனைத்து துறைகளிலும் முன்னிலை வகித்து வருவதால், நாட்டிலேயே சிறந்த நிருவாகத்திறன் மிக்க மாநிலம் என்ற பாராட்டினை தமிழ்நாடு பெற்றுள்ளது. பல்வேறு துறைகளின் சிறப்பான செயல்பாடுகளினால், தேசிய அளவில் ஏராளமான விருதுகளைப் பெற்று, வெற்றிநடை போடுகிறது தமிழகம்.

வருகின்றது. அரசு நிறுவனங்களில் வழங்கப்படும் 4 சதவீத சிறப்பு ஒதுக்கீட்டில் நிலுவையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக, ஒரு சிறப்பு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கைகளை ஏற்று 60:40 பகிர்வு அடிப்படையில் ஆதிதிராவிடர்களுக்கு உயர்கல்வி உதவித் தொகையை மறுசீரமைத்த மத்திய அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடைமுறையிலுள்ள கல்வி உதவித்தொகை திட்டத்தின் மூலம், தற்போது பயன்பெறும் அனைத்து மாணவர்களும் புதிய திட்டத்திலும் தொடர்ந்து பயனடைவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

தைப்பூசம் என்பது தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் ஒரு முக்கியமான பண்டிகையாகும். மேலும், பல்வேறு பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று, தைப்பூசம் பண்டிகை தினத்தை பொது விடுமுறையாக இந்த அரசு அறிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை, 11,464 திருக்கோயில்களில் ரூ.551 கோடி செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது. 2020ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த கனமழையால் சேதமடைந்த சிதம்பரம் அருள்மிகு இளமையாக்கினார் திருக்கோயிலின் திருக்குளச் சுற்றுச்சுவர் ரூ.2.61 கோடி செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது. நிவர் மற்றும் புரெவி புயல்களின் காரணமாக சேதமடைந்த நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள நாகூர் தர்கா குளத்தின் சுற்றுச்சுவர்கள் ரூ.4.34 கோடி செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது. ஹஜ் மற்றும் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கான நிதியுதவியை அரசு உயர்த்தியுள்ளது. மொழிவாரி சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், உரிய சட்டத்தின் மூலம் மாநில சிறுபான்மையினர் ஆணையம் விரிவுபடுத்தப்படும்.

கடந்த 2020ஆம் ஆண்டு மனிதகுல வரலாற்றில் மறக்க முடியாத ஆண்டாக இருந்தது. கோவிட்–19 பெருந்தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து, உறுதியுடனும், மன தைரியத்துடனும், நாம் மீண்டு வருவோம். வரும் ஆண்டுகளில் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் புத்துயிர் காணுவோம் என்ற நம்பிக்கையில், நம் தேசத்தின் மக்கள் அனைவரும், குறிப்பாக தமிழக மக்கள், இந்த முன்நிகழ்வில்லாத நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். கோவிட்–19 பெருந்தொற்று மீட்புப் பணிகளில் அயராது உழைத்த சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, காவல்துறை, உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து அரசுத் துறைகளின் முன்களப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள், இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து குடிமக்களுக்கும் இத்தருணத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் பங்களிப்பிற்காக, உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து துறைகளிலும் முன்னிலை வகித்து வருவதால், நாட்டிலேயே சிறந்த நிருவாகத்திறன் மிக்க மாநிலம் என்ற பாராட்டினை தமிழ்நாடு பெற்றுள்ளது. பல்வேறு துறைகளின் சிறப்பான செயல்பாடுகளினால், தேசிய அளவில் ஏராளமான விருதுகளைப் பெற்று, வெற்றிநடை போடுகிறது தமிழகம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தன்னிகரற்ற தலைமையின் கீழ், சிறப்பாகச் செயல்படும் அனைத்து அரசுத் துறைகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் தமிழ்நாட்டின் 15ஆவது சட்டமன்றத்தின் நிறைவு கூட்டத் தொடரில் கூடியுள்ளோம். அரசின் சார்பாக, பல்வேறு கொள்கைகளையும், திட்டங்களையும் நான் எடுத்துரைத்துள்ளேன். இந்த அரசு, பெருமைப்படும் விதமாக பல சாதனைகளைப் புரிந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், ஜனநாயக முறையில் விவாதங்களிலும், கலந்துரையாடல்களிலும் இந்த மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்களித்ததன் மூலம், இந்த அரசின் கொள்கைகள் மேம்படுத்தப்பட்டு, அவை திறம்பட செயல்படுத்தப்பட்டன. உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

❖ ❖ ❖

இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பதில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது

சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்
ஆற்றிய உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின் பதிலுரை – 05.02.2021

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெண்ணின் பெருந்தக்க யாவுள ?
பெண்ணைவிட பெருமைக்குரியது ஏதும்
உண்டா ?

கேட்டார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

பெண் என்றால் தாய்,
பெண் என்றால் தெய்வம்,
பெண் என்றால் தியாகம்,
பெண் என்றால் உழைப்பு.

“ பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்
புவி பேணி வளர்த்திடும் ஈசன்”

என்றார் மகாகவி பாரதியார்.

பெருமைக்குரிய பெண்மணியாக,
வணங்கத்தக்க தாயாக,
எடுத்துக்காட்டான தலைவியாக வாழ்ந்து,
எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய,
இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா
அவர்களை
மனதார தொழுது, வணங்கி
எனது உரையினைத் தொடங்குகிறேன்.

“வெற்றி நடைபோடும் தமிழகமே” என்று நாம்,
மார்தட்டிச் சொல்லக் காரணமாக இருக்கும்
இந்த மகத்தான சாதனைகளுக்கெல்லாம்,
அடித்தளம் இட்டவர் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள்.

“முதலிடம் நோக்கி – முன்னேறும் தமிழ்நாடு”
என்று பார் புகழ ஆட்சி செய்தவர்
இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தெய்வமே பெண்ணாகி,

நம் புரட்சித் தலைவி அம்மாவாகி

தியாகத்தின் உருவாகி – இன்று

நமக்கெல்லாம் "யாதுமாகி நிற்கும்"

புரட்சித் தலைவியின் திருவுருவப் படத்திற்கு

என் இதயத்தோட்டத்தில் நாளும் பூக்கும்

நன்றி மலர்களை,

விசுவாசம் மிக்க பக்தனாய் சமர்ப்பிக்கிறேன்.

மீண்டும் எங்கள் ஆட்சியே என்ற

உறுதி மொழியின் தொடக்கமாக

எனது உரை அமைவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 02.02.2021 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் Dr. V.P.B. பரமசிவம் அவர்களால் முன் மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.M. நரசிம்மன் அவர்களால் வழிமொழியப்பட்ட இத்தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் தங்களது அரிய கருத்துக்களை தெரிவித்தும், பாராட்டியும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களிடம் நாங்கள் காட்டும் விசுவாசத்திற்கு கிடைத்த வெகுமதிதான், தமிழ்நாடு மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை – எங்களுக்கு அளித்த மகத்தான ஆதரவு – எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு.

"என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை" என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து, அவரது வழிகாட்டுதலின்படி செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், சொன்னதை மட்டும் அல்லாமல், சொல்லாத பல மக்கள் நலத் திட்டங்களையும், செயல்படுத்தி, எங்களிடம் ஆட்சிப் பொறுப்பளித்த மக்களுக்கு ஏற்றமிகு வாழ்வினை நல்கி வருகிறோம்.

அதற்கு எடுத்துக்காட்டாக, சட்டமன்ற விதி எண் 110இன் கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட மொத்தம் 644 அறிவிப்புகளில், 607 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 198 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 409 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. 31 அறிவிப்புகளுக்கு, திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 6 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

அதேபோல, டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் 32 மாவட்டங்களில் 568 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. 566 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 289 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 277 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2 அறிவிப்புகளுக்கான திட்டப் பணி தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை ரூ.42,144.69 கோடி மதிப்பீட்டில் 48,782 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், ரூ.36,912.97 கோடி மதிப்பீட்டில் 8,012 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. ஆகமொத்தம், ரூ.79,57,66 கோடி மதிப்பீட்டில் 56,794 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது இந்த அரசு மக்களின் தேவைகளை நிறைவு செய்ய எடுத்த நடவடிக்கைகளுக்கு ஒரு சான்றாகும் என்பதை மகிழ்ச்சியுடன் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு மக்கள் வாழ்வு உயர, அமைதி, வளம், வளர்ச்சி என்ற கோட்பாடுகளையும், தொலைநோக்குப் பார்வை 2023–ஐ

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏழாவது முறையாக மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி, 100 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கு அதிகமாக எட்டி சாதனை படைத்துள்ளது, மாண்புமிகு அம்மாவின் அரசு.

அடிப்படையாகக் கொண்டும், பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மக்கள் நலனுக்காக, மாண்புமிகு அம்மாவின் அரசால் சரித்திர சாதனையாக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பல. அதே வேளையில், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், எடுத்த துணிச்சலான முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும், தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமில்லா வாழ்விற்குப் பொருத்தமாக, மெரினா கடற்கரையில், மிகப்பெரிய நினைவு மண்டபமும், மாண்புமிகு அம்மா அவர்கள் குடியிருந்த கோயிலான 'வேதா நிலையம்' நினைவில்லமாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் திருநாமத்தின் பெயரில் தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் முழு திருவுருவச் சிலையும் நிறுவப்பட்டது. அதேபோல, அம்மா அவர்களின் சாதனைகளை இன்றைய தலைமுறையினரும், இனிவரும் தலைமுறையினரும் அறிந்துகொள்ளும் வகையில், சென்னையில் ஒவ்வொரு ஆண்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் நாளை அரசு விழாவாகக் கொண்டாட உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவும், அம்மாவின் அரசும், மக்களுக்கு நலன் பயக்க மக்களை நாடிச் சென்று பல்வேறு நலத் திட்டங்களையும், நாடு முன்னேற்றமடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தும் அரசாக செயல்பட்டு வருகின்றது. அதே நேரத்தில், தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் சமயங்களில், அதனை துணிந்து எதிர்த்து குரல் கொடுப்பதற்கும் தயங்காது, தேவையேற்படும்போது சட்டப் போராட்டங்களையும் நடத்தி, அதியமான் தனது நாட்டைக் காத்தது போல் தமிழர்களின் உரிமையை மீட்டுத் தந்து, தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாத்தது மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும்தான் என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். காவேரி, முல்லைப் பெரியார் அணை, இருமொழிக் கொள்கை, ஜல்லிக்கட்டு போன்ற பல்வேறு பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் உரிமையை நிலை நிறுத்தியதே இதற்குச் சான்றாகும்.

மாண்புமிகு அம்மா அரசின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் சட்டப் போராட்டத்தின் மூலமாக, தமிழ்நாட்டின் வாழ்வாதாரப் பிரச்சினையான, காவேரி பிரச்சினையில், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டி, காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்தது மாண்புமிகு அம்மாவின் அரசுதான் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முல்லைப் பெரியார் அணையின் நீர்மட்ட உயரத்தை உயர்த்த சட்டப் போராட்டம் நடத்தி ஆணை பெற்றதும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான்.

காவேரி படுகையில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டால், தங்களின் விளைநிலம் பாலைவனமாகி, தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என அச்சப்பட்ட டெல்டா விவசாயிகளின் அச்சத்தைப் போக்க, விவசாயியான எனது தலைமையில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, குறுகிய காலத்திலேயே பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்காக சட்டத்தினை இயற்றி, டெல்டா பகுதி விவசாய பெருமக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்துள்ளது. வேளாண்மையைப் பாதிக்கும் தொழிற்சாலைகள் டெல்டா பகுதிகளில் துவங்குவதைத் தடுக்க இந்தச் சட்டம் வழி வகை செய்யும்.

தமிழ்நாடு பெரும்பாலும் பருவமழையை நம்பியே உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தமிழ்நாட்டில் ஆற்று நீரைக் கொண்டு ஏரி, குளம், குட்டை, ஊரணிகளை நிரப்பி, பின்னர் அந்த நீர் குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறான பொறியியல் கட்டமைப்புகளை நமது முன்னோர்கள் கட்டமைத்து இருந்தனர். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. ஆற்றைச் சுற்றியுள்ள கிராமங்கள் பாசன வசதி பெற்றன. நிரம்பிய ஒரு ஏரியிலிருந்து வெளியேறும்

மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த 7 ஆண்டுகளில், 5 முறை கிருஷி கர்மான் விருதினை பெற்று சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

நீர், அடுத்த ஏரிக்கு பாயும் விதத்தில் கட்டமைப்புகளை ஏற்படுத்தினர். கல்லணை போன்ற சிறப்பான அணைகளை கட்டி, காவேரி ஆற்றை பாசன வசதிக்கு பயன்படுத்திக் கொண்டனர். இதேபோன்று, பல நீர் நிலைகளை தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தி நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர்.

பொருளாதார வளர்ச்சிக்கு நீர் மேலாண்மை மிகவும் அவசியமானதாகும். நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார்கள். தற்போது மாண்புமிகு அம்மாவின் அரசும், அவர்களின் வழியிலேயே, மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மை நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், கழிவு நீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும் “நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்” என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டு, பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த இயக்கம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், மக்கள், அரசு சாரா நிறுவனங்கள், தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உள்ளடக்கிய மக்கள் இயக்கமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே

என்கிறது சங்க இலக்கியம். அதாவது மழையிலும், அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலன்போல, குழந்தையைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருள்.

சிறு குழந்தையை தாயானவள் கண்ணை இமை காப்பது போல் காத்த செயலும், நீர்நிலைகளை காக்கும் செயலும் ஒன்றாகவே எண்ணப்பட்டு வந்துள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு நீர்மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து, ஒரு சொட்டு மழைநீர் கூட வீணாகக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில், நீர்நிலைகளைத் தூர்வாரி, புதிய நீர்நிலைகளை உருவாக்கியும், நீர் நிலைகளை, ஒரு தாய் தனது குழந்தையைக் காப்பதுபோல், பாதுகாத்து வருகின்றது மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

தமிழ்நாட்டில் வறட்சியினை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் புனரமைக்க பண்டைய குடிமராமத்து திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் ‘குடிமராமத்து திட்டம்’ என்ற ஒரு சிறப்பான திட்டம் என்னால் 13.03.2017 அன்று துவக்கப்பட்டு, இன்றுவரை 1,418 கோடி ரூபாய் செலவில் ஏரிகள், வரத்து வாய்க்கால்கள் போன்ற நீர் நிலைகளில் 6,211 குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று, கிராம உள்ளாட்சி அமைப்புகளின் பராமரிப்பில் இருக்கின்ற 28,623 நீர்நிலைகள் ரூ.422.60 கோடி செலவில் சீரமைக்கப்பட்டன. தூர்வாரும்போது, ஏரிகள் ஆழமாவதுடன், கிடைக்கும் வண்டல் மண் விவசாயிகளின் நிலத்திற்கு இயற்கை உரமாகவும் பயன்படுவதற்கு திட்டம், தீட்டி, நடைமுறைப்படுத்தி, வெற்றி கண்ட அரசு அம்மாவுடைய அரசு.

மேலும், பாசன வசதி பெறும் நிலங்களின் பரப்பு அதிகரிக்கப்பட்டு சென்ற ஆண்டு வறட்சிக் காலத்திலும் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு பருவமழை காலத்தில் பெய்த மழைநீர் அதிக அளவு சேமிக்கப்பட்டு, நீர்நிலைகள் அனைத்தும் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. இதன் மூலம் இந்த ஆண்டு உணவு உற்பத்தியில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் சாதனை படைக்க உள்ளது.

மழை நீர் வீணாக கடலில் கலப்பதைத் தடுத்து, விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான நீர் கிடைக்கவும், நிலத்தடி நீர் மட்டம் உயரவும், மூன்றாண்டு காலத் திட்டமாக ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு

தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத, ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களைக் கண்டறிந்து, சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களுக்கு உடனடியாக அந்தப் பகுதியிலேயே சிகிச்சை பெறக்கூடிய அளவிற்கு, தமிழ்நாடு முழுவதும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் 2,000 “முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள்” துவங்கப்பட்டு வருகின்றன.

செய்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.934 கோடி மதிப்பீட்டில் நதிகள், ஓடைகள் ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுபோன்று, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக ரூ.730.40 கோடி மதிப்பீட்டில் 31,834 சிறிய தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

காவேரி ஆற்றுப் பாசன பகுதிகளில், கடைமடை வரை தண்ணீர் செல்ல கடந்த காலங்களில் பல நாட்களாகும். ஆனால், தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து திட்டமும், காவேரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளும் செம்மையாக மேற்கொள்ளப்பட்டதால், இந்த ஆண்டு குறுகிய காலத்திலே கடைமடை வரை தண்ணீர் தங்குதடையின்றி சென்றடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் பயிர் சாகுபடியில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டு மக்களின் கனவு திட்டங்களான காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டம், தாமிரபரணி–கருமேனி ஆறு – நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம், அத்திக்கடவு அவினாசி திட்டம், மேட்டூர்–சரபங்கா வடிநில நீரேற்றுத் திட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர்–குமாரமங்கலத்தில் கதவணை, நஞ்சைப்புகளூரில் காவேரியில் புதிய கதவணைத் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் என பல்வேறு நீர்வள ஆதாரத் திட்டங்களை நிறைவேற்றி வரும் ஒரே அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதன் மூலம் இன்று தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

கங்கையை தூய்மைப்படுத்துதல் திட்டத்தைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க "நடந்தாய் வாழி காவேரி" திட்டத்தில் புனரமைக்கும் பணிக்கான முதல்நிலை திட்ட அறிக்கை ரூ.10,711 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கக் கோரி, மத்திய அரசின் ஜல்சக்தி துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியை பெருக்கவும், அதே நேரத்தில் விவசாயிகளின் நலன் காக்கவும், ஒரு விவசாயி தலைமை ஏற்று ஆட்சி நடத்தும், மாண்புமிகு அம்மாவின் அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத வகையில் காவேரி டெல்டா பகுதியில் அதிகபட்ச குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏழாவது முறையாக மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கு அதிகமாக எட்டி சாதனை படைத்துள்ளது மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களில் 32.41 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்த அரசும் மாண்புமிகு அம்மாவுடைய அரசு தான்.

கடந்த 7 ஆண்டுகளில், 5 முறை கிருஷி கர்மான் விருதினை பெற்று சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

விவசாயிகள் தலைவர் மரியாதைக்குரிய மறைந்த திரு.சி. நாராயணசாமி நாயுடு அவர்கள் ஆற்றிய சிறந்த சேவையை போற்றிப் பாராட்டும் வகையில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைப்பிடித்து, அதிக நெல் மகசூல் பெற்றமைக்காக, குடியரசு தின விழாவில் வழங்கப்படும் விருது, இந்த ஆண்டு முதல், 'திரு.சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது' என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகின்றது. பாரம்பரிய நெல் பாதுகாவலர் 'திரு.நெல் ஜெயராமன்' அவர்களது பெயரில் 'பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம்' உருவாக்க நடவடிக்கை எடுத்து, உழவுக்கும், உழவர்களுக்கும் பாடுபட்டவர்களை, தமிழ்நாடு அரசு பெருமை அடைய செய்துள்ளது என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

கடந்த நான்கு ஆண்டுகளில், பயிர் காப்பீட்டுத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இதுவரை, சுமார் ரூ.53,49,000 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக

கொரோனா நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு வந்தவுடன், அந்த தடுப்பூசி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் கட்டணமில்லாமல் போடப்படும் என்று அறிவிப்பைத் தந்த முதல் மாநிலம் தமிழ்நாடுதான்.

ரூ.9,312 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, நடப்பாண்டிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்திடும் வகையில், நமது விவசாயிகளின் நலன் கருதி, இணை காப்பீட்டுத் திட்டம் என்ற புதிய அணுகுமுறையில் ரூ.1,470 கோடி காப்பீட்டுக் கட்டணம் மானியமாக ஒப்பளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை, 23,57,000 விவசாயிகள் சாகுபடி செய்த 39.56 இலட்சம் ஏக்கர் பரப்பில் உள்ள பயிர்களைக் காப்பீடு செய்துள்ளனர்.

நுண்ணீர்ப் பாசன திட்டத்தின் கீழ், கடந்த 10 ஆண்டுகளில் ரூ.3,972 கோடி மானியங்கள் மூலம் 7.66 இலட்சம் எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்று 7.17 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். 2019–2020 ஆண்டில் நுண்ணீர்ப் பாசன திட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது என்ற செய்தியை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“வாய் மட்டும் இருந்தால் மொழி பேசும் தெய்வம்”

என்று கால்நடையைப் போற்றி புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடல் வரிகளுக்கு ஏற்ப கால்நடைத் துறையில் உயர் வளர்ச்சியினை அடைய ஆசியாவிலேயே மிகப்பெரிய ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா 1,102 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,023 கோடி மதிப்பீட்டில் தலைவாசலில் அமைக்கப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், உடுமலைப் பேட்டை மற்றும் தேனி ஆகிய இடங்களில் ரூ.275 கோடி செலவில் 5 கால்நடை மருத்துவ கல்லூரிகள் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

ரூ.5.10 கோடி செலவில் 6 கால்நடை மருத்துவ பல்கலைக் கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ரூ.83.40 கோடி செலவில் 1,105 கால்நடை மருந்தகங்கள், 14 கோடி ரூபாய் செலவில் 440 துணை நிலையங்கள், ரூ.6.55 கோடி செலவில் 15 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் ரூ.8.40 கோடி செலவில் 8 பன்முக கால்நடை மருத்துவமனைகள் தொடங்கப்பட்டுள்ளன.

2010–2011இல் நாள் ஒன்றிற்கு 20.26 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின் கொள்முதல், தற்போது 37.46 இலட்சம் லிட்டராக உயர்ந்து மிகப்பெரிய சாதனையை படைத்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் ‘நிவர்’ மற்றும் ‘புரெவி’ என அடுத்தடுத்து இரண்டு புயல்களால் தமிழ்நாடு பாதிப்புக்கு உள்ளானது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்கள் குழுவும், அதிகாரிகள் குழுவும் அனுப்பி வைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டன. புயலின் போதே, நான் செம்பரம்பாக்கம் ஏரியைப் பார்வையிட்டு, அதன் பாதுகாப்பு பற்றி ஆய்வு செய்து, அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகளை வழங்கினேன். மறுநாளே, கடலூர் உள்ளிட்ட புயல் பாதித்த மாவட்டங்களுக்கு நான் நேரில் சென்று, விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஆறுதல் கூறி, மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தினேன்.

இதன் காரணமாக, உயிரிழப்புகள் இல்லாமல் தடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு, சூடான, தரமான உணவு வழங்கப்பட்டது. அங்கு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு, கோவிட் தொற்று ஏற்படாமல் தடுக்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்ட மின் இணைப்புகள் போர்க்கால அடிப்படையில் சீர் செய்யப்பட்டு, வெகு விரைவிலேயே மின் விநியோகம் சரி செய்யப்பட்டது. இவ்வாறு எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகளினால், தமிழ்நாடு வெகு விரைவிலேயே இயல்பு நிலைக்கு திரும்பியது.

தமிழக விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, ‘நிவர்’ மற்றும் ‘புரெவி’ புயலின் தாக்கத்தின் காரணமாகப் பாதிப்பிற்குள்ளான வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு உயர்த்தப்பட்ட இடு பொருள் மானியம் வழங்க ரூ.565.46 கோடி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

மாநில பேரிடர் நிவாரண நிதி விதிமுறைகளின்படி, பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளான மானாவாரி பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 7,410 ரூபாயும், நீர் பாசன வசதி பெற்ற பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு

2011லிருந்து 2021 வரை மாண்புமிகு அம்மாவுடைய அரசு 3,355 பேர் மருத்துவக் கல்வி படிக்கக் கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்த அரசு, எங்களுடைய அரசு.

13,500 ரூபாயும், நீண்டகால பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 18,000 ரூபாயும் இடுபொருள் மானியமாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால்,

❖ மானாவாரி பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 10,000 ரூபாயும்,

❖ நெற்பயிர் மற்றும் நீர்ப் பாசன வசதி பெற்ற பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 20,000 ரூபாயும்,

❖ நீண்டகால பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 25,000 ரூபாயும் உயர்த்தி வழங்கவும்,

அதே போன்று, அதிகபட்சமாக 2 எக்டேர் பரப்பளவில் மட்டும் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற உச்சவரம்பை தளர்த்தி, பாதிக்கப்பட்ட பரப்பளவு முழுவதற்கும் உச்சவரம்பின்றி இடுபொருள் நிவாரணம் வழங்கவும் நான் ஆணையிட்டு, அதை வழங்கிய அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில், வடகிழக்கு பருவமழை ஜனவரி மாதத்தில் தொடர்ச்சியாக பெய்த மிக கன மழையின் காரணமாக, அறுவடை நிலையில் இருந்த நெற்பயிர்களும், இதர பயிர்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை கருத்தில் கொண்டு, போர்க்கால அடிப்படையில், பாதிக்கப்பட்ட வயல்களின் கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்வதற்கு வேளாண் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில், ஜனவரி 2021 மாதத்தில் தொடர்ச்சியாக பெய்த கன மழையின் காரணமாக, 6,62,689 எக்டேர் வேளாண் பயிர்களும், 18,645 எக்டேர் தோட்டக்கலைப் பயிர்களும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாக கணக்கிடப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகள் பல்வேறு தரப்பினரால் பாராட்டப்பட்டது என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு காரணமான மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த, நன்றியையும், பாராட்டுதல்களையும் இந்த அவையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

சீனாவில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டது பற்றி அறிந்தவுடன், ஜனவரி 2020 முதல் முனைப்புடன் செயல்பட்டு துரிதமான நடவடிக்கைகளை நான் முடுக்கிவிட்டேன். தமிழ்நாட்டில் 07.03.2020 அன்று நோய்த் தொற்று முதன் முதலில் கண்டறியப்பட்டவுடன் களத்தில் துரிதமாக பல்முனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

“விலகி இருங்கள், விழித்திருங்கள், வீட்டிலேயே இருங்கள்” எனும் எனது கனிவான வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டு மக்கள் உரிய ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

நமது கூட்டு முயற்சியினால், நோய்த் தொற்றிலிருந்து குணமடைந்து, இல்லம் திரும்புவோரின் சதவிகிதம் இன்று இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம். அதுமட்டுமல்ல உயிர் இழந்தோரின் சதவிகிதமும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே தமிழ்நாட்டில்தான் மிக மிகக் குறைவு. இதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர், மருத்துவ வல்லுநர்கள், பொது சுகாதார வல்லுநர்கள், பத்திரிகையாளர்கள், நடுநிலையாளர்கள், தமிழ்நாடு அரசைத் தொடர்ந்து பாராட்டி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் சுமார் 1.54 கோடி பேருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் 68 அரசு மற்றும் 186 தனியார் ஆய்வகங்கள் உட்பட 254 ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே அதிகமான RT-PCR பரிசோதனைகள் மேற்கொள்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இதில் 78 விழுக்காடு அரசு பரிசோதனை மையங்களில் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இறப்பு விகிதமும் 1.47 விழுக்காடாக குறைந்துள்ளது.

மருத்துவமனைகளுக்கு இந்த தொற்று நோயை குணப்படுத்தத் தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களும், உரிய மருந்துகளும் தங்கு தடையின்றி வழங்கப்பட்டன. களப்பணியில் உள்ள அனைத்து

மாணாக்கர்கள் கல்லூரிப் படிப்பினைத் தொடர்வதற்கு வசதியாக 7 சட்டக் கல்லூரிகள், 21 பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள், 5 கால்நடை மருத்துவக் கல்லூரிகள், 40 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன.

பணியாளர்களுக்கும், கட்டுப்பாட்டு பகுதியில் வாழும் மக்களுக்கும், ஜிங்க் மற்றும் வைட்டமின் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த நோய் மேலாண்மைக்காக அலோபதி மருத்துவத்துடன், இந்திய முறை மருத்துவ சிகிச்சை, நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்காக சித்த மருந்தான கபசுரக் குடிநீர், பெரும்பான்மையான மக்களுக்கு தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

14 முறை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும், 14 முறை மருத்துவ வல்லுநர்களுடன், ஆலோசனைக் கூட்டங்களை நான் நடத்தியுள்ளேன். தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் 14 முறை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு மாதமும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, அனைத்து மாவட்டங்களும் அரசின் ஆலோசனைகளை ஏற்று சிறப்பாக செயல்பட்ட காரணத்தால், இந்நோய்த் தொற்றுப் பரவல், இந்தியாவின் மற்ற மாநிலங்களைக்காட்டிலும் தமிழகத்தில் குறைந்து, தற்போது தொற்று பாதித்தவர்கள் 500க்கும் குறைவாக உள்ள நிலையைக் காண முடிகிறது. இது தவிர, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் நான் சுற்றுப்பயணம் செய்து, என்னுடைய தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, மேலும், கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினேன்.

சிறந்த மருத்துவ உட்கட்டமைப்பாலும், மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், பிற அரசு ஊழியர்கள் உள்ளிட்ட தன்னலம் கருதா பணியினாலும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு வெற்றிக் கொள்ள முடிந்தது.

டாக்டர் ரங்கராஜன் கமிட்டி அளித்த ஆலோசனைகளின் அடிப்படையில், கொரோனா காலக்கட்டத்தில் தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை அனைத்து இல்லங்களிலும் சிறப்பாகக் கொண்டாட, சுமார் 2.06 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக ரூ.2,500/– ரொக்கம் மற்றும் முழுக்கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. இன்றைக்கு அனைத்து குடும்பங்களிலும் தைப் பொங்கல் சிறப்பாக இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத, ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களைக் கண்டறிந்து, சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களுக்கு உடனடியாக அந்தப் பகுதியிலேயே சிகிச்சை பெறக்கூடிய அளவிற்கு, தமிழ்நாடு முழுவதும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் 2,000 "முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள்" துவங்கப்பட்டு வருகின்றன. அம்மா மினி கிளினிக்குகள் மூலமாக ஏழை, எளிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கேயே அவர்கள் தங்கள் உடலில் ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். இதனை ஒரு வரலாற்றுச் சாதனையாக எங்களுடைய அரசு கருதுகிறது.

கொரோனா நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு வந்தவுடன், அந்த தடுப்பூசி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் கட்டணமில்லாமல் போடப்படும் என்று அறிவிப்பைத் தந்த முதல் மாநிலம் தமிழ்நாடுதான். இந்த திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்த மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, முன்னுரிமை அடிப்படையில் 20 விழுக்காடு மக்களுக்கு அதாவது 1.6 கோடி மக்களுக்கு, நடப்பு ஆண்டுக்குள் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தி, தமிழ்நாட்டை கொரோனா தொற்று நோய் அற்ற மாநிலமாக உருவாக்குவோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு, கோவிட்–19 நோய்த் தொற்று கட்டுப்பாடு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக இதுவரை, ரூ.7,604.80 கோடி செலவிட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரை,
கடந்த 10 ஆண்டுகளில், ரூ.6,994 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்ட
புதிய 90 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் கிராமப்புற மற்றும்
நகர்ப்புற பகுதிகளில் உள்ள 1.57 கோடி மக்கள் பயன்பெறுகின்றனர்.

நீட் தேர்வினால், தங்களது மருத்துவக் கனவை நிறைவேற்ற முடியுமா என்றிருந்த அரசுப் பள்ளி மாணாக்கர்களின் கனவை நனவாக்க, அவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆணையை மாண்புமிகு அம்மாவின் அரசு பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில், இந்த ஆண்டு 336 அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மருத்துவக் கல்லூரியிலும், 99 மாணாக்கர்கள் பல் மருத்துவக் கல்லூரியிலும் சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தில் ரூ.16 கோடி சுழல் நிதி உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது. அந்நிதியில் இருந்து மாணாக்கர்களுக்கான கல்வி, விடுதி கட்டணங்கள் போன்றவற்றை மாண்புமிகு அம்மாவின் அரசே நேரடியாக கல்லூரி நிருவாகத்திற்கு செலுத்துகிறது.

தமிழ்நாட்டில் மொத்த மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை – 7,809. அதில் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கர்களின் எண்ணிக்கை – 8,41,251. இதில் அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை – 3,056. 12ஆம் வகுப்பு படிக்கும் அரசு பள்ளி மாணாக்கர்களின் எண்ணிக்கை – 3,44,485. இதில் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களின் சதவிகிதம் – 41. 41 சதவிகிதம் அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணாக்கர்களின் கடந்த ஆண்டு நீட் தேர்விலே 6 மாணாக்கர்கள் தான் மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. தற்பொழுது மருத்துவ கல்லூரியின் இடம் 3,650. இதில் 7.5 சதவிகித இடங்கள் அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு கிடைத்துள்ளது. 41 சதவிகிதம் அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணாக்கர்களுக்கு 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீட்டின் மூலம் நடப்பாண்டில் 435 பேர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வாய்ப்பை இன்றைக்கு நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம்.

அரசுப் பள்ளியில் ஏழை, எளிய மாணாக்கர்கள் தான் அதிகமாக படிக்கிறார்கள். அவர்களின் மருத்துவர் ஆகும் கனவை நனவாக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. 2011இல் திமுக ஆட்சி முடிவடையும்போது மருத்துவக் கல்வி பயில்வதற்கு 1,945 இடங்கள் தான் தமிழகத்திலே இருந்தன. இதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்த 2011 முதல் அவர்கள் மறைந்த வரை ஆட்சி செய்த காலத்திலே 3,060 ஆக உயர்த்தினார்கள். அதாவது, 1,115 இடங்களை புதியதாக மருத்துவக் கல்வி பயில அம்மா அவர்கள் அதிகரித்துக் கொடுத்தார்கள். நான் முதல்வராக பொறுப்பேற்றதில் இருந்து 3,060 ஆக இருந்த மருத்துவம் பயிலும் இடத்தை 3,650 ஆக உயர்த்தியுள்ளேன். இப்பொழுது ஒரே ஆண்டில் வரலாற்றுச் சாதனையாக 11 புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,650 மருத்துவம் பயிலும் இடங்கள் தோற்றுவிக்கப்பட உள்ளன.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதில் இருந்து முதல் கட்டமாக 590 பேர் மருத்துவர்களாக சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு, இப்போது 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் தோற்றுவித்ததன் மூலமாக அதிலிருந்து 1,650 பேர் புதிதாக மருத்துவம் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு, இரண்டும் சேர்த்தால் இந்த நான்கு ஆண்டு காலத்திலே 2,240 பேர் புதிதாக மருத்துவக் கல்வி படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்த அரசு எங்களுடைய அரசு.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து அம்மா அவர்கள் மறைகின்ற வரை 1,115 பேர் புதிதாக மருத்துவக் கல்வி படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கி தந்தார்கள். மாண்புமிகு அம்மாவின் மறைவிற்குப் பிறகு, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக 2,240 பேர் புதிதாக மருத்துவக் கல்வி படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தது. 2011லிருந்து 2021 வரை மாண்புமிகு அம்மாவுடைய அரசு 3,355 பேர் மருத்துவக் கல்வி படிக்கக் கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்த அரசு எங்களுடைய அரசு. தமிழகத்தில் வரும் கல்வியாண்டில் மருத்துவப் படிப்பில் மொத்தம் 5,300 இடங்கள் இன்றைக்கு இருக்கின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்போடு எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, மும்பையைச் சார்ந்த, "ப்ராஜெக்ட்ஸ் டுடே" என்ற நிறுவனம், COVID-19 காலத்திலும், புதிய முதலீட்டினை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தினை பெற்றுள்ளது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும், 17 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, வரலாற்றுச் சாதனை படைத்த அரசு அம்மாவுடைய அரசு.

“மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல்” என்ற தொலைநோக்குப் பார்வை திட்டத்துடன், மீனவர்களின் வாழ்வில் ஒளி வீச, புரட்சித் தலைவர் காட்டிய பாதையில், மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் மீனவர்கள் நலன் காக்க, மீன்பிடி தடை கால நிவாரணம் மற்றும் மீன்பிடி குறைவுகால நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு வானிலை எச்சரிக்கை தகவல்களை வழங்க, நவீன தொலைத்தொடர்பு கருவிகளான Satellite Phone, NAVIC மற்றும் NAVTEX போன்றவற்றை வழங்கி வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் 4 மீன்பிடித் துறைமுகங்கள் ரூ.501 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 8 மீன்பிடித் துறைமுகங்கள் ரூ.939 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

29 இடங்களில் ரூ.282 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 14 இடங்களில் புதியதாக மீன் இறங்கு தளங்கள் ரூ.232 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

2011ஆம் ஆண்டு மே மாதம் மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றபோது, மிகவும் சவாலாக இருந்த பிரச்சினை மின்வெட்டுப் பிரச்சினை. முந்தைய மைனாரிட்டி திமுக அரசு தமிழ்நாட்டை இருளில் மூழ்கடித்து, தமிழ்நாட்டை இருண்ட காலத்திற்கு கொண்டு சென்றது. அறிவிக்கப்பட்ட, அறிவிக்கப்படாத பல மணி நேர மின்வெட்டு மற்றும் மின் தடையை தமிழ்நாட்டு மக்கள் தினம் தினம் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருந்தனர். அதற்கு முக்கியக் காரணம் முந்தைய திமுக அரசு புதிய மின் உற்பத்தித் திறனை ஏற்படுத்த தவறியது தான். அதில் சரியான கவனம் செலுத்தாது தான்.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபின், மாண்புமிகு அம்மா அவர்கள் புதுப்புது திட்டங்கள் தீட்டி, அவற்றைப் போர்க்கால அடிப்படையில் நடைமுறைப்படுத்தியதன் மூலமாகவும் அவரை தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திய தொலைநோக்குத் திட்டங்களின் பயனாகவும், 2011ஆம் ஆண்டு 16,883 மெகாவாட்டாக இருந்த மின் நிறுவு திறன் 10 ஆண்டுகளில், 32,149 மெகாவாட்டாக, அதாவது இரு மடங்காக அதிகரித்துள்ளது.

துணை மின்நிலையங்களின் எண்ணிக்கை 1,343 லிருந்து 1,823 ஆகவும், மிக உயர் மின்னழுத்த பாதை 24,018 சுற்று கிலோ மீட்டரிலிருந்து 35,622 சுற்று கிலோ மீட்டராகவும், அனைத்துவகை மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை 2.23 கோடியிலிருந்து 3.14 கோடியாகவும், விவசாய மின் இணைப்புகள் 19.73 இலட்சத்திலிருந்து 21.57 இலட்சமாகவும் உயர்ந்து சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவுடைய அரசு.

புதிய மின் நிலையங்களை நிறுவியதன் மூலமாகவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலமாகவும், கிடைக்கும் கூடுதல் மின்சாரம், மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மாவும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும், கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துவரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் தரமான மின்சாரம்

பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் பதிவு செய்து, அவற்றிற்குத் தீர்வு காண, ஒரு குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து, ரூ.12.78 கோடி செலவில் “முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்” ஒன்றை அரசு செயல்படுத்த உள்ளது. இதனால் பல்வேறு அரசுத் துறைகள் தொடர்பான குறைகளை மனுதாரர் ஒரே தளத்தில் பதிவேற்றம் செய்து, உடனடியாக அது பரிசீலிக்கப்பட்டு, விரைந்து தீர்வு காணப்பட உள்ளது.

தங்குதடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தொடர்ந்து மின்மிகை மாநிலமாகவும் திகழ்ந்து வருகின்றது என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி"

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப வருங்காலத்தில் சிறந்த மனிதவளத்தினை உருவாக்க மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

புதியதாக 248 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்; 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணாக்கர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே பள்ளிகள் அமைய வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக கல்வி கற்போருடைய எண்ணிக்கை உயர்ந்து, இந்தியாவிலேயே கற்போருடைய எண்ணிக்கை உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை இன்றைக்கு அடைந்திருக்கின்றோம்.

பள்ளி இடைநிற்றலைத் தடுக்க கடந்த 10 ஆண்டுகளில் ரூ.22,285 கோடி செலவில் மாணாக்கர்களுக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள் என 14 வகையான பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி, தகவல் தொழில்நுட்பவியலில் மாணாக்கர்கள் சிறந்து விளங்க விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில், 52.31 இலட்சம் மாணாக்கர்களுக்கு ரூ.7,337.50 கோடி செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளி மாணாக்கர்கள், எளிதில் பள்ளிக்குச் சென்று வர, விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 10 ஆண்டுகளில் 59.77 இலட்சம் மிதிவண்டிகள் ரூ.2,119.38 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

மாணாக்கர்கள் கல்லூரி படிப்பினைத் தொடர்வதற்கு வசதியாக 7 சட்டக் கல்லூரிகள், 21 பல்வகை தொழில் நுட்பக் கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள், 5 கால்நடை மருத்துவக் கல்லூரிகள், 40 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. ஆக இப்படி கல்விக்கூடங்களை திறந்த காரணத்தினால் இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பதில் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டு இருக்கிறது.

கொரோனா நோய்த் தோற்றுக் காரணமாக அனைத்து பள்ளி மாணாக்கர்கள் தங்கள் கல்வியை தமிழக அரசால் 24 மணி நேரமும் ஒளிபரப்பப்படும் "கல்வி தொலைக்காட்சி" மூலமாகவும், இணைய வழி வகுப்புகள் மூலமாகவும் கற்று வருகிறார்கள். கல்லூரி மாணாக்கர்கள் இணைய வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு வசதியாக 9.69 இலட்சம் மாணாக்கர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2 GB Data கட்டணமில்லாமல் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசின் இந்த நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில் மனிதவளம் மேம்பாடு அடைந்துள்ளது. இதன் விளைவாக 2010–2011ஆம் ஆண்டில் 32.9 விழுக்காடாக இருந்த உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் தற்போது 49 விழுக்காடாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பதிலே முதன்மை மாநிலமாகத் திகழ்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

அரசுப் பணிக்கான வேலைவாய்ப்பில், திறமையான விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகிதம் இடஒதுக்கீடு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமனம் வழங்கி, மாண்புமிகு அம்மாவின் அரசு விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு, போக்குவரத்து வசதி என்பது உயிர் நாடி போன்றது. அதனை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த 10 ஆண்டுகளில் 23,705 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும் / மேம்படுத்தும் பணிகள், 12,013 கி.மீ. நீளமுள்ள சாலைகளை புதுப்பிக்கும் பணிகள், 77 பாலப் பணிகள் மற்றும் 614 சிறு பாலங்கள் ரூ.17,345.91 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு சென்னை, கோவை, சேலம் மற்றும் மதுரை ஆகிய

மாநகரங்களில் ரூ.848.88 கோடி மதிப்பீட்டில் முதல் அடுக்கு மற்றும் இரண்டடுக்கு மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

278 ஆற்றுப் பாலங்கள் ரூ.355.82 கோடி மதிப்பிலும், 34 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள்/ வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை ரூ.1,103 கோடி மதிப்பீட்டிலும், 4 சாலை மேம்பாலங்கள் ரூ.244.10 கோடி மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.2,265.74 கோடி மதிப்பீட்டில் 4,326.50 கி.மீ. நீளமுடைய 1,620 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

கோவை மாநகர், அவினாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைக்கும் பணிக்கு ரூ.1,621.30 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டின் முக்கிய தொழில் நகரமாக விளங்கும், சென்னை மாநகராட்சியின் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில், மெட்ரோ இரயில் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் கட்டம் 1இன் கீழ், ரூ.18,380 கோடி செலவில், 45.1 கி.மீ நீளத்திலான 2 மெட்ரோ இரயில் வழித்தடங்கள் முழுமையான பயன்பாட்டில் உள்ளன.

மேலும், வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான 9 கி.மீ கட்டம் 1இன் நீட்டிப்பு வழித்தடத்தில் பயணிகள் சேவை விரைவில் துவங்க உள்ளது. 118.9 கி.மீ நீளத்திலான 3 மெட்ரோ இரயில் வழித்தடங்களை ரூ.61,843 கோடி செலவில் செயல்படுத்துவதற்கான மெட்ரோ இரயில் கட்டம் –II திட்டத்திற்கு, 21.11.2020 அன்று மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் சார்பில் 2011 முதல் 2021 வரை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 14,489 புதிய பேருந்துகள் ரூ.3,321.62 கோடி செலவில் வாங்கப்பட்டு பொதுமக்கள் சேவைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த காலக்கட்டத்தில் 1,532 புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், கோயம்பேடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில், தமிழகத்தின் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் பேருந்துகளினால் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்தின் தெற்கு பகுதிகளிலிருந்து வரும் பேருந்துகளுக்காக வண்டலூர் கிராமம், கிளாம்பாக்கத்தில் 88 ஏக்கர் பரப்பளவில் ரூ.314 கோடி மதிப்பீட்டில் பேருந்து முனையம் கட்டுவதற்கான பணிகள் மார்ச் 2019இல் தொடங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும், மேற்கிலிருந்து வரும் பேருந்துகளுக்காக குத்தம்பாக்கம் கிராமம் திருமழிசையில் 25 ஏக்கர் பரப்பளவில் 307 கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்து முனையம் கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரை, கடந்த 10 ஆண்டுகளில், ரூ.6,994 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்ட புதிய 90 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள 1.57 கோடி மக்கள் பயன்பெறுகின்றனர்.

ரூ.1,362 கோடி செலவில் 85 நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பிரத்யேக குடிநீர் திட்டங்களின் மூலம் 49 இலட்சம் மக்கள் பயன் பெறுகின்றனர்.

1,328 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்ட 32 பாதாள சாக்கடைத் திட்டங்கள் மூலம் 214 மில்லியன் லிட்டர் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு 23.26 இலட்சம் மக்கள் பயன்பெறுகின்றனர்

ஊரகப் பகுதிகளில் ரூ.6,686 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சத்து 97 ஆயிரம் குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன மற்றும் ரூ.508.18 கோடி மதிப்பீட்டில் 11,43,557 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, ரூ.914.42 கோடி மதிப்பீட்டில் நெம்மேலியில் 100 MLD சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் உட்பட 225 MLD அளவிற்கு புதிய நீராதாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ரூ.7,337.78 கோடி மதிப்பீட்டில் 550 MLD சுத்திகரிப்புத் திறன் கொண்ட 2 கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையின் விரிவாக்கப்பட்ட 40 பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டங்கள் ரூ.1,260 கோடி மதிப்பீட்டில்

துவங்கப்பட்டு, 19 பகுதிகளில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், 25 பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.1,286 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு, 15 பகுதிகளில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

தொழிற்சாலைகள் பயன்பாட்டிற்காக ரூ.834.21 கோடி மதிப்பீட்டில் 45 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட 2 மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இதன் மூலம் சென்னை மாநகரம் இந்தியாவிலேயே 20 விழுக்காடு கழிவுநீர் மறுசுழற்சி செய்யும் ஒரே நகரமாகத் திகழ்கிறது. ரூ.380 கோடி மதிப்பீட்டில் கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய்க் கண்டிகை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு, சென்னை குடிநீர் தேவைக்கு வலு சேர்க்கப்பட்டுள்ளது.

“ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள்
வைப்போம்”

என்ற மகா கவியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக தமிழ்நாட்டில் ஒரு தொழிற்புரட்சியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலக முதலீட்டாளர் மாநாடு 2015இல் பல்வேறு துறைகள் சார்பாக கையெழுத்திடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் கையெழுத்திடப்பட்ட 10,073 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட முதலீடு ரூ.2,42,160 கோடி ஆகும். இதன் மூலம் 4,70,065 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இவற்றில் கடந்த 5 ஆண்டுகளில் 72 சதவிகித திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்ததன் மூலம் ரூ.73,711 கோடி முதலீடுகளும், 1,86,838 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று சாதனையைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாடு 2019இன் போது, ரூ.3,00,501 கோடி முதலீட்டில் 10 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் வகையில் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இவற்றில் ரூ.24,492 கோடி முதலீட்டில் 1,10,844 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதியளித்துள்ள 81 திட்டங்கள், அதாவது 27 சதவிகிதத் திட்டங்கள், ஒரே ஆண்டில் தமது வணிக உற்பத்தியைத் துவங்கி சாதனை படைத்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 2.20 இலட்சம் கோடி முதலீட்டில் 5.33 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதியளித்துள்ள 191 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

நான் மேற்கொண்ட வெளிநாட்டு பயணத்தின் மூலம் 41 நிறுவனங்களின் ரூ.8,835 கோடி மதிப்பீட்டிலான முதலீடுகளை, தமிழ்நாட்டுக்கு ஈர்த்து, 35,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு, புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளை பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடு வாழ் தமிழ் மக்களுக்கு இரத்தின கம்பளம் விரித்து வரவேற்கவும், “யாதும் ஊரே” என்ற புதிய திட்டத்தை கடந்த சட்டப்பேரவையில் நான் அறிவித்தேன். அதனை, நானே நேரடியாகச் சென்று அமெரிக்காவில் துவக்கி வைத்தேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்போடு எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, மும்பையைச் சார்ந்த, “ப்ராஜெக்ட்ஸ் டுடே” என்ற நிறுவனம், COVID-19 காலத்திலும், புதிய முதலீட்டினை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தினை பெற்றுள்ளது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டிருக்கிறது.

நடப்பு ஆண்டில் மட்டும் ரூ.60,674 கோடி முதலீட்டில் சுமார் 1,00,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 73 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இந்தக் கொரோனா காலத்தில் பெற்று கையெழுத்திடப்பட்டு சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

மேலும், DLF நிறுவனத்தின் ரூ.5,000 கோடி முதலீட்டிலான தகவல் தொழில்நுட்ப பூங்கா திட்டம்,

உடல் உறுப்பு தானத்தில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசின் விருதை தொடர்ந்து 6 முறை பெற்றுள்ளது.

ரூ.1,500 கோடி முதலீட்டில் அசன்டாஸ் ரேடியல் ஐ.டி. பார்க் திட்டம், ரூ.250 கோடி முதலீட்டில் பட்டாபிராம் டைடல் பார்க் திட்டம், ரூ.250 கோடி முதலீட்டில் ஸ்ரீபெரும்புதூர் வானூர்தி பூங்காவில் நவீன AEROHUB திட்டம் என பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

எனது தலைமையிலான உயர்நிலைக் குழு, ஒவ்வொரு முதலீட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் தொடர்ந்து ஆய்வு செய்து, தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. இதுமட்டுமின்றி, ரூ.39,941 கோடி முதலீட்டிலான 62 பெரும் தொழில் திட்டங்களை, நானே நேரடியாக ஆய்வு செய்ததன் பயனாக, உடனுக்குடன் அவற்றுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தொழில் முனைவோருக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் நலனுக்காகவும் உரிய கடன் வசதி வழங்குவதற்காக மாநில அளவிலான வங்கி அதிகாரிகளின் கூட்டம் எனது தலைமையில் நடைபெற்றது. அதன் பயனாக தொழில் முனைவோர்களுக்கு ரூ.11,539.61 கோடி அளவிற்கு கடன் வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தொழில் முனைவோருக்கு அதிக அளவில் கடன் உதவி அளித்த மாநிலம் தமிழ்நாடு தான்.

கொரோனா காரணமாக சர்வதேச போக்குவரத்து முடங்கியுள்ள சூழலில், தொழில் முதலீடுகள் தடையின்றி நடைபெற அரசு பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொண்டது. உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்கள், சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள நிலங்களை, இருக்கும் இடத்திலிருந்தே இணைய வழியில் முப்பரிமாண அமைப்பில் பார்வையிடும் சிறப்பான வசதி இந்தியாவிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்தியது தமிழ்நாடு அரசுதான். இதன்மூலம் நிலத்தின் தன்மை, சாலை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் என அனைத்தையும் விரிவாக ஆய்வு செய்து, நிலத்திற்கான விண்ணப்பத்தையும் இணைய வழியிலேயே அனுப்பிட இயலும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, தற்பொழுது அதிக அளவில் தொழில் முதலீடுகள் தமிழ்நாட்டை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. எனவே, தமிழ்நாடு பொருளாதாரத்தில் தனது இயல்பு நிலையை வெகு விரைவில் அடைந்து தொடர்ந்து முன்னிலை வகிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது, உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ், நலத்திட்ட உதவிகளைப் பெற்று வரும் 62,661 பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் உட்பட சுமார் 4 இலட்சம் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கு தனியே ஒரு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம் அமைத்து, மாண்புமிகு அம்மாவின் அரசு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிப்பதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

சமீபத்தில் புதுக்கோட்டையிலிருந்து சென்ற இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு உயிர் இழந்துள்ளனர். அந்த குடும்பங்களுக்கு நிவாரணமாக தலா ரூ.10 இலட்சம் வழங்க ஆணையிட்டேன். மேலும், அவர்களின் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு விதிகளுக்கு உட்பட்டு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வழங்க ஆணையிட்டுள்ளேன்.

இலங்கை கடற்படையினரால், தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்பட்டதற்கு என்னுடைய கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து, இப்படிப்பட்ட நிகழ்வுகள் தொடரக் கூடாது எனவும், இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண, மத்திய அரசு இதில் தலையிட்டு, இலங்கை அரசிடம் கலந்து பேசி ஒரு தீர்வு காணவேண்டும் என நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் தெரிவித்து உள்ளேன் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலைமைக்கு மிக முக்கிய காரணம், கச்சத்தீவினை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்ததுதான்.

மாண்புமிகு அம்மாவின் அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

❖ ஆண்டுதோறும் ரூ.100 கோடி செலவில், ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம். இதே திட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை மூலம் ரூ.2,500 கோடி செலவில் அடிப்படை வசதிகள் 22,695 குடியிருப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசுக்கு கொடுத்த அழுத்தத்தின் விளைவாகத்தான், தமிழ்நாடு அரசு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சமீபத்தில் மத்திய அரசு 60:40 என்ற பங்கீட்டு முறையை அறிவித்துள்ளது. இதனால் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு கிடைக்கும் நிதி ஆதாரம் அதிகரிக்கும்.

இதுபோன்ற எண்ணற்ற நலத் திட்டங்களை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகியோரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறுபான்மையின மக்களுக்கு என்றும் அரணாக விளங்குகிறது.

நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டு கிறிஸ்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள நிதியுதவி அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தியவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்கான நிதியுதவி தற்போது ரூ.20,000லிருந்து அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, ரூ.37,000மாக மாண்புமிகு அம்மாவின் அரசால் உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

கிறிஸ்துவ தேவாலயங்களுக்கான புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக வழங்கப்படும் மானியத்தை ரூ.1 கோடியிலிருந்து 5 கோடியாக உயர்த்தி வழங்கிய அரசு அம்மாவின் அரசுதான்.

ஹஜ் பயணத்திற்கான மானியம் நிறுத்தப்பட்ட போதும், மாண்புமிகு அம்மாவின் அரசால் ஹஜ் மானியம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இது தற்போது ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்த்து புனரமைப்பதற்காக வழங்கப்படும் மானியத்தை இசுலாமியப் பெருமக்களின் கோரிக்கையை ஏற்று ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தியதும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான். சென்னையில் ஹஜ் இல்லம் கட்டும் பணிக்கு ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான், பணிகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன. மேலும் நாகூர் தர்கா குளத்தின் சுற்றுச்சுவர் சீரமைக்க ரூ.4.34 கோடி ஒதுக்கீடு செய்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான்.

தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, சௌராஷ்டிரம், மராட்டியம் ஆகிய சிறுபான்மையினரின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு "தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக, பொருளாதார மேம்பாட்டு கழகத்தினை" உருவாக்கி, அம்மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்ததும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசுதான்.

தமிழ்நாட்டில் தைப்பூசம் முக்கிய பண்டிகையாக கொண்டாடப்பட்டு வருகிறது. பல்வேறு தரப்பினரிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில், தைப்பூச திருநாளை அரசு பொது விடுமுறையாக அறிவித்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை பெருமையோடு நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நன்கு பேணி காக்கப்பட்டு, தமிழ்நாடு ஒரு அமைதி பூங்காவாகத் திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு ஒரு முன்னோடித் திட்டமாக தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக காவலன் செயலி, மகளிர் உதவி எண் 181, குழந்தைகளுக்கான உதவி எண் 1098 போன்றவையும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, குற்றங்கள் வெகுவாக தடுக்கப்பட்டுள்ளன. இந்திய நகரங்களிலேயே சென்னை மாநகரில், அதிகமாக சிசிடிவி கேமராக்கள் நிறுவப்பட்டு, குற்றச் செயல்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்க, இந்திய தண்டனைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வர மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சமீபத்தில் முத்தூட் பைனான்ஸ், லலிதா ஜுவல்லரி கொள்ளை மற்றும் மயிலாடுதுறையில் நடந்த கொலை ஆகிய வழக்குகளில் மிகத் துரிதமாக செயல்பட்டு, தமிழ்நாடு காவல்துறை குற்றவாளிகளைக் கண்டுபிடித்தது அனைவரின் பாராட்டையும் பெற்றது. சிறந்த உட்கட்டமைப்பை உருவாக்குவதாலும், போக்குவரத்து காவல்துறையின் சிறப்பான செயல்பாடுகளினாலும், தமிழ்நாடு தொடர்ந்து நாட்டிலேயே விபத்துகளை வெகுவாக குறைக்கும் சிறந்த மாநிலமாக இன்றையதினம் விளங்கி வருகிறது.

இந்தியாவிற்கே முன்னோடியாக காவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் மன நலன் காக்கும் “காவலர் நிறைவாழ்வு பயிற்சி” என்னும் திட்டத்தை ரூ.10 கோடி செலவில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தியது. இதன்மூலம், 95,000 காவலர்களும், காவலர் குடும்பங்களும் பயனடைந்தது குறிப்பிடத்தக்கது.

காவலர் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கான உயரிய மருத்துவ தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு அனைத்து வகையான உயரிய சிகிச்சை, அறுவை சிகிச்சைகள் போன்றவற்றை அளித்திட ஏதுவாக, சென்னையில் உள்ள காவல் மருத்துவமனையை, அனைத்து பிரதான மருத்துவ துறைகளையும் உள்ளடக்கிய முழுத்திறன் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்தப்படும்.

காவல் ஆளிநர்களின் குழந்தைகளுக்கு நல்ல தரமான கல்வி கிடைக்க ஏதுவாக, சென்னையில் ஏற்கனவே காவல் உறைவிடப்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கடலூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் காவல் உறைவிடப் பள்ளிகள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னால் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் 19.08.2019 அன்று தொடங்கப்பட்டு, இதுவரை 9,77,638 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இதில் 5,22,812 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இவற்றில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 1,44,348 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் பதிவு செய்து, அவற்றிற்குத் தீர்வு காண, ஒரு குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து, ரூ.12.78 கோடி செலவில் “முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்” ஒன்றை அரசு செயல்படுத்த உள்ளது. இதனால் பல்வேறு அரசுத் துறைகள் தொடர்பான குறைகளை மனுதாரர் ஒரே தளத்தில் பதிவேற்றம் செய்து உடனடியாக அது பரிசீலிக்கப்பட்டு, விரைந்து தீர்வு காணப்பட உள்ளது. இத்திட்டத்தை நான் விரைவில் துவக்கி வைக்க உள்ளேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் முக்கிய வேலையளிக்கும் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட திறன் பதிவு தொகுதியாக செயல்படக்கூடிய, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேம்படுத்தப்பட்ட இணையதளத்தை 19.09.2020 அன்று நான் துவக்கி வைத்தேன்.

தமிழ்நாட்டில் வேலை நாடும் இளைஞர்களையும், வேலை அளிக்கும் தனியார் துறை நிறுவனங்களையும், இணைய வழியாக இணைத்து வேலைவாய்ப்புகளை பெற்றுத் தரும் நோக்கத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின், வேலைவாய்ப்பு பிரிவால் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ‘தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்’ ‘Tamil Nadu Private Job portal’ (www.tnprivatejobs.tn.gov.in) என்ற இணையதளத்தை 16.06.2020 அன்று நான் துவக்கி வைத்தேன். இவ்விணையதளம் வாயிலாக 14,167 வேலைநாடுநர்கள் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை பறைசாற்றும் கீழடியில், கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்த ரூ.12.21 கோடி செலவில் சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் ‘அகழ் வைப்பகம்’ என்னால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டப்பட்டு வருகிறது. ஹார்வர்டு பல்கலைக்கழகம், ஹுஸ்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ் இருக்கைகள் நிறுவ தமிழ்நாடு அரசு நிதி உதவி அளித்து, தமிழ் ஆராய்ச்சிக்கு வித்திட்டுள்ளது.

குடிசை இல்லா தமிழ்நாட்டை உருவாக்க, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பல்வேறு வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமுதாய நலப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் 3.36 இலட்சம் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் ரூ.11,011 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ், ரூ.4,436.24 கோடி செலவில் 33,575 புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ.4,679.50 கோடி மதிப்பீட்டில் 23,502 வீடுகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், நகர்ப்புறங்களில் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்காக ரூ.23,426.41 கோடி செலவில் 4,72,401 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

முதலமைச்சரின் சூரியமின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ், 4,00,000 வீடுகள் ரூ.8,119.22 கோடி நிதி ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு, இதுவரை 3,75,416 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ், 2016–2017 முதல் 2019–2020 வரை 5,73,340 வீடுகள் ரூ.9,746.78 கோடி நிதி ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு, இதுவரை 3,21,849 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

“தானே” வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 90,000 வீடுகள் ரூ.900 கோடி நிதி ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அரசு திட்டங்களின் கீழ், கட்டப்பட்ட வீடுகளை பராமரிப்பு செய்தல் திட்டத்தின் கீழ், 2018–2019ஆம் ஆண்டில் 45,594 வீடுகள் ரூ.227.97 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்களின் கனவான குடியிருப்பு வீடு கட்டுவதை உறுதிப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசால் மேற்கூரை அமைக்க வழங்கப்பட்டு வந்த, 50,000 ரூபாயை உயர்த்தி, 1,20,000 ரூபாயாக வழங்க உத்தரவிட்டுள்ளேன். இதனால், பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படும் அலகுத் தொகை 1,70,000 ரூபாயிலிருந்து 2,40,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிட்–19 பெருந்தொற்று நோயாலும், அதன் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், பொருளாதார வளர்ச்சி குறைந்த நிலையில், 2020–2021ஆம் நிதியாண்டு தொடங்கியது. வருவாய் வரவினங்கள் கடுமையாகக் குறைந்து, கூடுதல் செலவினங்கள் பெரிய அளவில் ஏற்பட்ட, இந்த கடினமான காலக்கட்டத்தில் நிதி நிலைமையை அரசு நேர்த்தியாக நிருவகித்தது. கோவிட்–19 மீட்டெடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள், சுகாதார உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் மூலதனப் பணிகளின் செலவினங்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அச்செலவினங்கள் அதிகரிக்கப்பட்டன. தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து, கோவிட்–19 நிவாரணம் மற்றும் மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.7,604.80 கோடி செலவிட்டுள்ளது.

மருத்துவ சாதனங்கள் கொள்முதலுக்காக ரூ.913.16 கோடி, மருத்துவ கட்டுமானப் பணிகளுக்காக ரூ.159.75 கோடி, பணியாளர் செலவுகளுக்காக ரூ.454.08 கோடி, பொது கொரோனா மேலாண்மை மற்றும் நலப்பணிகளுக்காக ரூ.735.39 கோடி, தேசிய சுகாதார இயக்கத்தின் மாநில பங்களிப்பாக ரூ.32 கோடி, தனிமைப்படுத்துதல் செலவினமாக ரூ.262.25 கோடி, புலம்பெயர் தொழிலாளர்களுக்காக ரூ.143.87 கோடி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ரூ.1,727.63 கோடி மற்றும் ரொக்க நிவாரணமாக ரூ.3,176.67 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ஆக மொத்தம், தமிழ்நாடு அரசு கோவிட்–19 சிகிச்சை மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 7,604.80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, செலவினம் மேற்கொண்டுள்ளது.

மேற்கூறிய செலவினங்களில் மாநில அரசின் நிதி ஆதாரங்களிலிருந்து ரூ.5,364.24 கோடி, மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.2,087.14 கோடி, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.153.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த் தொற்றினால் ஏற்படும் நிதி நெருக்கடியை சமாளிக்க மாநில அரசுகள் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டால் கூடுதல் சந்தைக் கடனுதவியை பெறலாம் என மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. மிகவும் பாதிப்படைந்த மாநிலப் பொருளாதாரம் மேலும் நலிவடையும் என்றும், இந்நேரத்தில் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை எனவும், கடன் வாங்குவதைப் பற்றி தயங்கும் நேரம் இதுவல்ல எனவும் பொருளாதார நிபுணர்களும் தங்கள் கருத்துக்களை தெரிவித்து இருந்தனர்.

அதன்படி, இதுவரை ரூ.28,880 கோடி மத்திய அரசிடமிருந்து, தமிழக அரசு கடனாகப் பெற்றுள்ளது. உரிய நேரத்தில், குறைந்த வட்டியில் கடன்களைப்

பெற்றதன் மூலம், கோவிட்–19 பெருந்தொற்று நோயின் கடுமையான தாக்கத்திலிருந்து தமிழ்நாட்டு மக்களை இவ்வரசு பாதுகாத்துள்ளது.

மத்திய அரசின் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், நாட்டிலேயே அதிகபட்சமாக 11 நகரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் பெற்று, ரூ.11 ஆயிரம் கோடியில் 579 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 174 பணிகள் முடிவடைந்தும், 298 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

இந்தியாவிலேயே ஆளுமை மிக்க முதல் மாநிலமாக மத்திய அரசால் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டின் ஆளுமையைப் பாராட்டி, “இந்தியா டுடே” தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சிறந்த மாநிலத்திற்கான விருதினை தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- தேசிய அளவில் நீர் மேலாண்மையில் சிறந்த மாநிலத்திற்கான விருதினை தமிழ்நாட்டிற்கு மத்திய ஜல் சக்தி துறை வழங்கியுள்ளது. நீர்நிலைகளை புதுப்பித்தலில் வேலூர், கரூர் மாவட்டங்கள், முதல் இரு இடங்களையும் நீர்நிலைகளை பாதுகாப்பதில் பெரம்பலூர் மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

- உடல் உறுப்பு தானத்தில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசின் விருதை தொடர்ந்து 6 முறை பெற்றுள்ளது.

- டிஜிட்டல் ஆளுமையில் சிறந்த மாநிலம் என்ற பிரிவில் மத்திய அரசின் “டிஜிட்டல் இந்தியா–2020 தங்க விருதை” இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

- ‘பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்’ திட்டத்தில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசின் விருதை பெற்றது. அதேபோன்று, மூத்த குடிமக்களுக்கு சிறப்பாக சேவையளிக்கும் முதல் மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதையும் தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

- பெங்களூரில் உள்ள பொது விவகார மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தமிழ்நாடு இரண்டாவது சிறந்த மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- தேசிய தர உறுதித் திட்டத்தின் கீழ், சிறந்த செயல்பாடுகளுக்காக தமிழ்நாட்டில் உள்ள 26 அரசு மருத்துவமனைகளுக்கும் மற்றும் 47 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மத்திய அரசால் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

- மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு விருதுகள், பொது விநியோகத் திட்டத்தை கணினிமயமாக்கியதில் விருது, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித் துறைக்கு விருது, தரமான மருத்துவ சேவைக்கான விருதுகள், போக்குவரத்து கழகங்களுக்கும், நகராட்சிகளுக்கும் சிறந்த முறையில் பணியாற்றியதற்காக விருதுகள், ஊரக வளர்ச்சித் துறைக்கு அதிக அளவில் விருதுகள் என பல்வேறு விருதுகளை மாண்புமிகு அம்மாவின் அரசு பெற்று தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

- இதுபோன்ற எண்ணற்ற விருதுகளை தமிழ்நாட்டின் ஒவ்வொரு துறையும், மத்திய அரசிடமிருந்தும், பல்வேறு பொது நிறுவனங்களிடமிருந்தும் பெற்று, விருதுகள் பெறும் மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது.

நான் கடந்த 16.02.2017 அன்று, முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டேன். மக்கள் பணியைச் சிறப்பாக செய்த காரணத்தினால், வரும் 15.02.2021 அன்று 4 ஆண்டுகளை நிறைவு செய்து 5ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.

இன்று சிலர் இந்த ஆட்சியை நிராகரிக்க வேண்டும் என்று உண்மைக்குப் புறம்பான பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டு மக்களோ, இந்த ஆட்சியே தொடரவேண்டும் என விரும்புகின்றனர். ஏனெனில்,

- காவேரி பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டி, காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்த அரசு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

- முல்லைப் பெரியார் அணையின் நீர்மட்டத்தை உயர்த்திக் காட்டிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● 20 ஆண்டுகளாக ஜெனரேட்டர் மூலமாகத்தான் முல்லைப் பெரியாறு அணை இயக்கப்பட்டு வந்தது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு முல்லைப் பெரியாறு அணையின் செயல்பாட்டிற்கு கேரள அரசிடமிருந்து மீண்டும் மின்சாரத்தை பெற்று அதை இயக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு தாலிக்குத் தங்கம் வழங்கியது மாண்புமிகு அம்மாவின் அரசு.

● உழைக்கும் மகளிருக்கு மானியத்துடன் இரண்டு சக்கர வாகனங்கள் வழங்கி மாண்புமிகு அம்மாவின் திட்டத்தை நிறைவேற்றியது மாண்புமிகு அம்மாவின் அரசு.

● மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.81,052 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கி, மகளிர் சொந்தக்காலில் பொருளாதாரத்தை ஈட்ட உதவி வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.

● அம்மா உணவகங்கள் மூலம் தரமான உணவை குறைந்த விலையில் வழங்குவது மாண்புமிகு அம்மாவின் இலட்சியம், அதை மாண்புமிகு அம்மாவின் அரசு நிறைவேற்றி வருகிறது.

● மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி, மற்றும் டேட்டா கார்டு வழங்கி, மாணவர்கள் சமுதாயத்தை உயர்த்திய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு மருத்துவ படிப்பில் 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கி, ஏழை மாணாக்கர்களின் மருத்துவ கனவை நனவாக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● ஒரே ஆண்டில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை நிறுவி வரலாற்று சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● அதிகளவில் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கி கல்வி கற்கக்கூடியவர்களின் எண்ணிக்கையில் உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்ற அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.

● இருளில் தத்தளித்த தமிழ்நாட்டை, மின்மிகை மாநிலமாக மாற்றி, இன்றைக்கு தடையில்லா மின்சாரத்தை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்குகிற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● வியக்கத்தகு திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டை நீர் மிகை மாநிலமாக மாற்றி வருகிறது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

● அதிகளவில் தொழில் முதலீடுகளை ஈர்த்து, இளைஞர்களின் வேலைவாய்ப்பினை பெருக்குவதற்கு முன்னுரிமை அளித்தது மாண்புமிகு அம்மாவின் அரசு.

● உலகமே பாராட்டும் வகையில், கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே தமிழ்நாட்டை பெருமைபடுத்துகிற அளவிற்கு, பாராட்டிச் பேசி, நற்பெயர் பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● ஜல்லிக்கட்டு உரிமையை மீட்டெடுத்து தென்மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவை நிறைவேற்றிய அரசு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

● டெல்டா விவசாயிகளின் நலனுக்காக பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் அமைத்து டெல்டா பாசன விவசாயிகளின் கனவை நனவாக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தியில் புரட்சி செய்து, ஏரிகள், குளங்கள், குட்டைகள் அனைத்தையும் தூர்வாரிய காரணத்தால் பருவ காலங்களில் பொழிந்த மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் சேமித்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு இந்தியாவிலேயே அதிக அளவில் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

● பால் உற்பத்தியை என்றைக்கும் நினைக்க முடியாத அளவிற்கு அதிகளவில் பெருக்கி சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

இந்தியாவிலேயே ஆளுமை மிக்க முதல் மாநிலமாக, மத்திய அரசால் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

● பொதுமக்களின் வசதிக்காக, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று 6 புதிய மாவட்டங்களை உருவாக்கித் தந்த அரசும் அம்மாவின் அரசு தான்.

இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியது மாண்புமிகு அம்மாவின் அரசு. இவையெல்லாம் ஒரு சில துளிகள் தான்.

அதுமட்டுமல்லாமல், வறட்சிப் பகுதிகள் பயன்பெற அத்திக்கடவு–அவினாசி திட்டம், குண்டாறு – காவேரி இணைப்புத் திட்டம், கீழ்பவானி மேம்பாட்டுத் திட்டம், நீர்வளத்தைப் பெருக்க ஆறுகளின் குறுக்கே ஆதனூர்–குமாரமங்கலம், நஞ்சைப்புகளூர் என பல இடங்களில் தடுப்பணைகள் உள்ளிட்ட எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், நிதி தொழில்நுட்ப நகரம், சென்னையில் புதிய விமான நிலையம், காவேரி மேம்பாட்டுத் திட்டம், தாமிரபரணி–வைப்பாறு திட்டம், ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம், சென்னை ஒருங்கிணைந்த வாகன நிறுத்தத் திட்டம் என பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவைகள் அனைத்தும் வரும் காலங்களில் செயல்படுத்தப்பட உள்ளன.

நான் செல்லும் இடங்கள் எல்லாம் அலைகடலென கூடும் மக்கள் இத்திட்டங்களையெல்லாம் பாராட்டுகின்றனர். இந்த ஆட்சி தொடர வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள், மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.

மாண்புமிகு அம்மாவின் அரசு மூன்றாம் முறையாக பதவியேற்று ஹாட்ரிக் நிகழ்த்தி, மேன்மேலும் எண்ணற்ற நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி, தமிழ்நாட்டை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. நான் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் வழங்கும் பேராதரவே இதற்குச் சான்று. மக்கள் மனங்களில் இன்றும் வாழும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மா எங்களுக்கு என்றும் துணை நிற்கும்.

சட்டமன்றத் தேர்தல் முடிந்த பிறகும், சட்டமன்றத்தில் தற்போது இருக்கின்ற இருக்கை நிலையே தொடரும். ஆளும் கட்சி வரிசையில் இருக்கும் நாங்கள் தொடர்ந்து இந்த இடத்திலேயே இருப்போம். எதிர்கட்சியினர் தொடர்ந்து அவர்கள் இருக்கின்ற இருக்கையிலேயே இருப்பார்கள் என்பதை நான் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்கள் நிறைவேறும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு உரிய பதிலுரையை நான் அளித்திருக்கிறேன் என நம்புகிறேன். அவர்களது கோரிக்கைகள் எதாவது விடுபட்டிருப்பின், அதையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த இனிய நேரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டு நிறைவு செய்கின்றேன்.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுக்கு அனுமதி கோரி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றன. ஜல்லிக்கட்டுப் போராட்டம் தமிழ்நாட்டு மக்களின் உரிமையை நிலைநாட்ட நடத்தப்பட்ட உணர்வுப்பூர்வமான போராட்டம். இந்தப் போராட்டத்தின்போது பதியப்பட்ட வழக்குகளில் பலர் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவே போராடினர். இந்தப் போராட்டங்களின்போது, சட்டம்–ஒழுங்கினை பராமரித்திட பல்வேறு வழக்குகள் பதியப்பட்டன. எனினும் சில விரும்பத் தகாத சம்பவங்கள் இந்தப் போராட்டங்களின்போது நடந்து விட்டன. இந்த வழக்கிற்குள் உணர்வுப்பூர்வமாக போராடிய மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை கருத்தில்கொண்டு, இந்தப் போராட்டங்களின்போது பதியப்பட்ட வழக்குகளில் காவலர்களை தாக்கியது, தீ வைப்பு போன்ற சட்டபூர்வமாக திரும்பப் பெற முடியாத ஒரு சில வழக்குகளைத் தவிர மற்ற வழக்குகளை, சட்ட வல்லுநர்கள் ஆலோசனையைப் பெற்று, எனது தலைமையிலான அம்மாவின் அரசு திரும்பப்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

“மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்று அல்லும் பகலும் மக்களுக்காகவே சிந்தித்து செயலாற்றி வெற்றி கண்டவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
27.01.2021 அன்று, மாண்புமிகு முன்னாள்
முதலமைச்சர் புரட்சித் தலைவி
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
நினைவிடத்தைத் திறந்து வைத்து
ஆற்றிய உரை

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தைத் திறந்து வைத்து, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நினைவிடத்தைப் புதுப்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு இருக்கின்ற மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே!

முன்னாள் அமைச்சர் மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் திரு.கே.பி. முனுசாமி அவர்களே!

முன்னாள் அமைச்சர் மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் திரு. வைத்திலிங்கம் அவர்களே!

முன்னாள் அமைச்சர் கழகத்தின் அவைத் தலைவர் அண்ணன் திரு.மதுசூதனன் அவர்களே!

தலைமைக் கழகத்தின் மூத்த நிருவாகிகளே!

தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே!

தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளே!

காவல்துறை உயர் அதிகாரிகளே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே

வாரியத் தலைவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வருகை தந்துள்ள பெரியோர்களே! தாய்மார்களே!

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீதும் மாறாத பற்றும் பேரன்பும் கொண்ட இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன்பிறப்புகளே!

இளைஞர் பட்டாளங்களே!

மகளிர் அணியைச் சேர்ந்த சகோதரிகளே!

பத்திரிகையாளர்களே மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1948ஆம் ஆண்டு, பிப்ரவரி 24ஆம் தேதி இந்த மண்ணிலே பிறந்து இயக்கத்தையும் தமிழ்நாட்டின் மக்களையும் காப்பதற்காக இறைவன் கொடுத்த கொடை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்கள் சர்ச் பார்க் கான்வென்ட்டில் பள்ளிப்படிப்பைச் சிறப்புடன் முடித்தார். சிறு வயதிலிருந்தே கலையில் ஆர்வமும் திறமையும் ஒருங்கே பெற்றிருந்தார். பரதநாட்டியத்தை முறையாகக் கற்றுக் கொண்டவர். பல்வேறு மொழிகளிலே பேசக்கூடிய ஆற்றல் மிக்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்த்திரை உலகில் ''வெண்ணிற ஆடை'' படம் மூலம் அறிமுகமானார். திரைக் காவியங்களில், தான் ஏற்ற பாத்திரங்களில் சிறப்பான நடிப்பினை வெளிப்படுத்தி மக்களிடத்தில் தனக்கென இடம் பெற்றவர். பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடன் பல படங்களில் நடித்து புகழ் பெற்றவர். திரைத்துறைக்கு தான் அளித்த சிறப்பான பங்களிப்பினால் கலைமாமணி, பிலிம்ஃபேர் உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர் நம்முடைய அம்மா அவர்கள், கழகத்தில் தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டார்.

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தியபோது, அத்திட்டத்தின் உயர்மட்டக் குழுவில் மாண்புமிகு அம்மா அவர்களை உறுப்பினராக நியமித்து அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு அடிக்கல் அமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களை கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக தேர்ந்தெடுத்த பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து கழகத்திற்கு வளர்ச்சியைத் தேடித் தந்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 1984இல் மக்களவை உறுப்பினராக பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் நியமனம் செய்தார்கள். மக்களவையில், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வாதத் திறமையைக் கண்டு அப்போதைய மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். 1989 சட்டமன்றத் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையைப் பெற்றவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவிற்குப்பின் நமது இயக்கத்தினை 1989இல் ஒருங்கிணைத்து, கழகத்தின் பொதுச்செயலாளராக பதவி ஏற்று கழகத்தை வழிநடத்தியவர். தமிழ்நாட்டின் முதலமைச்சராக 15½ ஆண்டு காலம் ஆட்சி புரிந்து, வரலாற்றில் 36 ஆண்டுகளுக்குப்பின் இரண்டாவது முறையாக தொடர்ந்து ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இராணுவக் கட்டுக்கோப்போடு கட்சியையும், ஆட்சியையும் வழிநடத்தி, பெண்குலத்திற்கே பெருமை சேர்த்தவர், இரும்பு மங்கை என்று பெயர் பெற்றவர், எதிரிகளாலும் தைரியசாலி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள். இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி அகில இந்திய அளவில் நாடாளுமன்றத்தில் மூன்றாவது மிகப் பெரிய கட்சியாக உருவெடுக்கும் அளவுக்கு வென்று காட்டி பெருமைப்படுத்தியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த வரலாற்றுச் சாதனையை இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த எந்தவொரு தலைவரும் நிகழ்த்தியதில்லை என்று பெருமைப்படும் அளவுக்கு வியப்பில் ஆழ்த்தியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பெற்ற தாய் தன் பிள்ளைகளைக் கவனிப்பது போல், தமிழ்நாட்டு மக்களைக் கவனித்து, ஏழை எளிய மக்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு முன்மாதிரித் திட்டங்களைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தியாவிலேயே மிக அதிக நாட்கள் பதவியில் இருந்த பெண் முதலமைச்சர் என்ற சாதனையைப் படைத்து பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் நமக்கு வழங்கிய ‘‘அமைதி–வளம்–வளர்ச்சி’’ என்னும் தாரக மந்திரத்தில் செயல்பட்டு, அமைதிப் பூங்காவாக, நல்ல வளத்துடன், வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு வெற்றிநடைபோட்டு வருவது அனைவரும் அறிந்ததே. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ உருவாக்கி தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவெடுக்க அடிகோலியவர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ‘‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’’ என்று அல்லும் பகலும் மக்களுக்காகவே சிந்தித்து செயலாற்றி வெற்றி கண்டவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 69 சதவிகித இடஒதுக்கீட்டினைச் செயல்படுத்தி சமூகநீதியை நிலை நாட்டி, ‘‘சமூக நீதி காத்த வீராங்கனை’’ மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழ்நாட்டிற்கான காவேரி நீர் பங்கீடு குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பினை, நீதிமன்றம் மூலமாக அரசிதழில் வெளியிட தொடர்ந்து போராடி வெற்றி கண்டு, காவேரி டெல்டா மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழி ஏற்படுத்திய ‘‘பொன்னியின் செல்வி’’ மாண்புமிகு அம்மா அவர்கள். அதுமட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவரும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சென்னை நகரின் குடிநீர் பிரச்சினைக்காக புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றியவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் உலகளவில் பாராட்டைப் பெற்றன. அதை பலர் தங்கள் நாட்டிலும் நடைமுறைப்படுத்தினர். பெண் சிசுக்களைக் காக்க தொட்டில் குழந்தைத் திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம் போன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த அம்மா உணவகம், ஏழை மக்களின் வாழ்வில் உண்மையான மாற்றத்தைக் கொண்டு வர விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி, அரிசி, மடிக்கணினி, மிதிவண்டி, கல்வி உபகரணங்கள், சீருடை, தாய்–சேய் பெட்டகம் என பல திட்டங்களைக் கொண்டு வந்து மக்களின் வாழ்வில் ஏற்றம் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சாதாரண மக்களும் வசதி படைத்த மக்களுக்கு இணையாக தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கு விரிவான மருத்துவக் காப்பீட்டுத்

திட்டம் கொண்டு வந்தவர். மழை நீர் சேகரிப்பு என்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் நீர்வளம் பெருக அடித்தளமிட்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சுனாமி, மழை வெள்ளமென்று இயற்கைப் பேரிடர்களின்போது அரசு இயந்திரம் முழு ஆற்றலுடன் இயங்க முன்மாதிரியாக இருந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், பெண்கள் நலனைப் பாதுகாப்பதிலும் அம்மா அவர்கள் காட்டிய நெஞ்சுரமும், திறனும் கொண்டிருந்ததால் கனிந்த இதயம் கொண்ட இரும்புப் பெண்மணி என்று புகழ் பெற்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். நில அபகரிப்புத் தடுப்புச் சட்டம் மூலமாகப் பல்வேறு குடும்பங்களின் உடைமைகளை மீட்டுக் கொடுத்த காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் வகையில் திட்டங்களை அமல்படுத்தியவர். மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்கியவர். திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 விழுக்காடு இடங்களென்று அறிவித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை அறிவித்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். காவல் துறையில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்ததோடு முற்றிலும் பெண்களே பணியாற்றக்கூடிய நியாய விலைக் கடைகளை அறிமுகம் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அம்மா சிறு வணிகக் கடன் போன்ற எண்ணற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி, ஏழை மக்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் ஊக்கம் அளித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

ஆதரவற்ற பெண்களுக்குத் திருமணத்திற்கு உதவித் தொகையும், தாலிக்குத் தங்கமும் கொடுத்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கு அரசு சேவை இல்லங்கள் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும், அம்மா வழியிலேயே பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்றென்றும் அரணாகத் தொடர்ந்து நின்று அவர்களை காத்து வருகின்றது. ஒரு தலைவனுக்கு உரிய ஆளுமைகளாக என்னென்ன கூறப்படுமோ அவை அத்தனையும் மாண்புமிகு அம்மா அவர்களின் இயல்பான குணங்களாக இருந்துள்ளது என்பது இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஒரு முன்னுதாரணம் ஆகும்.

தமிழ்நாட்டில் கட்சி, அரசியல் ஆர்வம் இல்லாத பல பெண்களிடம் சென்று உங்கள் ரோல் மாடல் யார் என்று கேட்டால் சற்றும் தாமதமில்லாமல் அவர்கள் மாண்புமிகு அம்மாவின் பெயரைத்தான் சொல்கிறார்கள் என்பதும்,

மாண்புமிகு அம்மாவைப் போல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் பல பெண்கள் மத்தியில் நிலவிக் கொண்டிருக்கின்ற காட்சியை நாம் காண்கின்றோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலம் தமிழ்நாட்டின் பொற்காலம் என அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டும் வகையில், பள்ளிக்கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உட்கட்டமைப்பு, தொழில் துறை, விவசாயம், நீர் மேலாண்மை, மீனவர் மேம்பாடு, எரிசக்தி மேம்பாடு, இளைஞர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், ஆதிதிராவிடர் நலன், விளையாட்டு வீரர்கள் நலன் என அனைத்து துறைகளிலும் எண்ணற்ற நலத்திட்டங்களைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் சாதிக்க முடியாத பல அரிய சாதனைகளைப் புரிந்து, பல்வேறு வெற்றிகளையும், விருதுகளையும் பெருமைமிகு மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிய பெருமை இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவைச் சாரும். தமிழ்நாடு மக்களின் நல்வாழ்வுக்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், எடுத்த துணிச்சல் முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமில்லா வாழ்விற்கு பொருத்தமாக மெரினா கடற்கரையில் இந்த மிகப் பெரிய நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பிரம்மாண்டமான நினைவு மண்டபம் அமைக்க உலகளாவிய கட்டடக் கலை நிபுணர்களிடமிருந்து வரைபடங்களைப் பெற்று, எல்லோரும் பாராட்டும் வகையில் நிபுணர் குழு மூலம், வரைபடங்களைத் தேர்வு செய்து குறித்த காலத்திற்குள் இந்த நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. நினைவு மண்டபத்தில், ஃபீனிக்ஸ் பறவை வடிவிலான நினைவுச் சின்னத்துடன் அருங்காட்சியகம், அறிவுத் திறன் பூங்கா, கருங்கல்லால் ஆன நடைபாதை வசதி, புல்வெளி மற்றும் நீர்த்தடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டு எழில்மிகு தோற்றத்துடன் இன்று காட்சியளிக்கின்றது. இத்தனை சிறப்பும், இன்னும் எண்ணற்ற சிறப்பும் கொண்ட இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நேரில் கண்டு அவர்களிமிருந்து அரசியலையும், ஆட்சிக் கலைகளையும் கற்றுக் கொள்ள நமக்கெல்லாம் கிடைத்த வாய்ப்பு மகத்தானது. அந்த வாய்ப்பு இறைவன் நமக்கு அளித்த கொடை என்றே எண்ணலாம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருமை, பெருமைகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக விளங்கிடவும், இங்கே அழகான நினைவிடத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அமைத்திருக்கின்றோம். இந்த நினைவிடத்தை கனத்த இதயத்துடன் பொதுமக்களுக்கு அர்ப்பணித்திருக்கின்றேன். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவிடமும் புதுப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவராலும் அன்போடு அம்மா என்று அழைக்கப்படுபவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அந்த அளவிற்கு ஆழமான அன்பை அனைத்துத்தரப்பு மக்களிடமும் பெற்றவர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஒருவர்தான்.

மாண்புமிகு அம்மாவின் நினைவிடத்தை உலகமே வியக்கும் வண்ணம் சிறப்பான முறையில் வரலாற்றில் இடம்பெறும் வகையில் அமைப்பதற்கு தங்கள் உழைப்பை அளித்த பொதுப்பணித் துறை மற்றும் செய்தித் துறை அலுவலர்கள், பணியாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் இதற்காக உழைத்த அனைவரையும் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களினுடைய நினைவிட நிகழ்ச்சியில் பங்குபெறுவதற்கு வந்து, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று வாகனங்களில் வீடு திரும்புகின்ற அத்தனை கழக நிருவாகிகளும், தொண்டர்களும் பத்திரமாக வீடு திரும்ப வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மிகப் பிரம்மாண்டமான எழில்மிகு நினைவிடத்தை உருவாக்குவதற்கு காரணமாக விளங்கிய பொதுப்பணித் துறையின் முதன்மைச் செயலாளர் மரியாதைக்குரிய டாக்டர் க. மணிவாசகம் அவர்களுக்கும் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து பொறியாளர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, இந்த நிகழ்ச்சியை சீரும், சிறப்போடும் இந்த நினைவிட திறப்பு விழாவை நடத்துவதற்கு ஏதுவாக அமைத்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரியாதைக்குரிய திரு.மகேசன் காசிராஜன் அவர்களுக்கும் அவரோடு இணைந்து பணியாற்றிய அலுவலர்களுக்கும், வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்

> தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 28.01.2021

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முழு திருவுருவச் சிலை திறப்பு விழாவின் இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் தனித்தன்மை நாம் அனைவரும் அறிந்ததே. எதை செய்தாலும் அதை நேர்த்தியுடனும், அழகுடனும் மிகச் சிறப்பாக செயல்படக்கூடிய ஆற்றல் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். எத்தகைய சோதனை ஏற்பட்டாலும் அதை துணிச்சலுடன் எதிர்கொண்டு, அறிவாலும் ஆற்றலாலும் வென்று காட்டக்கூடிய திறமை படைத்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அடுத்தவர் நலனுக்காகச் சிந்தித்து அதற்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர் என்பது அவருக்கு இறைவன் கொடுத்த வரம். மற்றவர்களுடைய துன்பங்களைத் துடைத்த அன்புக் கரங்கள் புரட்சித் தலைவி அம்மாவின் கரங்கள். அம்மாவின் மனம் ஒரு கோவிலைப் போல் புனிதமாக விளங்கியதைக் கண்டு வணங்கிய பெரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்ததை எண்ணி பெருமைப்படுகிறோம். அகவை 40இல் அரசாள வந்து அன்னை தெரசாவும், அமெரிக்க ஹிலாரியும், அர்னால்டும் தேடி வந்து வாழ்த்திய பெருமைக்குரியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு செய்த நன்மைகள் ஏராளம், ஏராளம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் அம்மாவின் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்றென்றும் அரணாகத் தொடர்ந்து நின்று அவர்களைக் காத்து வருகின்ற அரசு.

பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே!

என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

ஆண்களுக்கு பெண்கள் சமம் என்று மகளிருக்கும் காக்கிச் சட்டை அணியச் செய்தார். மகளிர் காவல் நிலையங்களைத் திறந்தார். பெண் கமாண்டோ படையை அமைத்து உலகத்தையே தமிழகத்தின் பக்கம் உற்று நோக்கச்

செய்தவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் அமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் இந்தியாவிலேயே முதன்முதலாகப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு என்னும் முன்னோடித் திட்டமாகத் தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய காவலன் செயலி, மகளிர் உதவி எண் 181, குழந்தைகளுக்கான உதவி எண் 1098 போன்றவை மூலம் குற்றங்கள் தடுக்கப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பினை மேலும் உறுதி செய்வதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு இந்திய தண்டனைச் சட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கிட மத்திய அரசின் அனுமதி பெற்று சட்டத் திருத்தங்களை கொண்டு வர மாண்புமிகு அம்மாவின் அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்!
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்!

என்று பாடினார் மகாகவி பாரதியார்.

“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா” என்று பாடும் தமிழ்கூறும் நல்லுலகில், கிராமியக் கலை, எழுத்து, பத்திரிகை, நீதிமன்றம், மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் வெற்றி பெற்று வருவது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான பெண்கள் மாண்புமிகு அம்மாவைப் போல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியிருப்பது, ஒரு பெண் மாபெரும் சக்தியாக மாற முடியும் என்பதை பறைசாற்றுகிறது.

இந்திய அரசியலில் பெண் தலைவர்கள், பெண் ஆட்சியாளர்கள் குறைவு என்ற போதிலும், அந்தக் குறைகளையெல்லாம் ஈடுசெய்து மாற்று சக்தியாக விளங்கியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாணவ சமுதாயத்தினரையும், இளைஞர்களையும் முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்வதில் மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதை அனைவரும் அறிவர். உதாரணமாக, கடந்த நான்காண்டுகளில் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் புதிதாக 10 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 7 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 41 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதற்கட்டமாக 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய 6 மாவட்டங்களில் புதிய அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 11 மாவட்டங்களில் ரூபாய் 3,995 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிதாக 1,650 மருத்துவ இடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவச் செல்வங்கள் ஏறத்தாழ 41 சதவிகிதம் மாணவச் செல்வங்களுக்கு கடந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் 6 இடம்தான் கிடைத்தது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு 41 சதவிகிதம் அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்ற வகையில் 7.5 உள்ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து சட்டம் இயற்றி, அதை அமல்படுத்தியதன் விளைவாக, இன்றைய தினம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசில், அதிகமான மாணவச் செல்வங்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். இதன்மூலம், ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவிகள் அதிக அளவில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றது.

முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள் 5,72,000 நபர்களுக்கு ரூ.1,200 கோடி கல்விக் கட்டண நிதி வழங்கப்பட்டுள்ளது. ரூ.33.60 கோடி மதிப்பீட்டில் 120 அரசு மேல்நிலைப் பள்ளிகள் உலகத்தரம் வாய்ந்த மாதிரிப் பள்ளிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இன்றைக்கு உலக அளவிலேயே விலையில்லா மடிக்கணினி கொடுக்கின்ற ஒரே அரசு தமிழ்நாடு அரசு என்பதை பெருமையோடு இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத் தரத்திற்கேற்ற கல்வியை நம்முடைய தமிழ்நாட்டில் பிறந்த மாணவச் செல்வங்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக ரூ.12,000 விலைபெறுகின்ற அந்த மடிக்கணினியை நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விலையில்லாமல் வழங்கினார்கள். இப்போது உலகத்தரத்திற்கேற்ற அறிவுப்பூர்வமான கல்வியைக் கொடுப்பதற்காக சுமார்

52 இலட்சம் மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா மடிக்கணினியைக் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணிக்காக, வேலைவாய்ப்பில் 3 சதவிகித இட ஒதுக்கீடு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்களை கௌரவிக்கின்ற அரசு, அம்மாவின் அரசு.

அதுமட்டுமல்ல, கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு, தமிழகத்தில் கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்திய அரசு அம்மாவின் அரசு.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 2011இல் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்கின்ற போது, 32 சதவிகித மாணவச் செல்வங்கள் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தனர். இப்போது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கல்விக்கு அதிக ஒதுக்கீடு செய்து கல்வியில் புரட்சி ஏற்படுத்தியதன் விளைவாக தமிழகத்தில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 49 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இந்தியத் திருநாட்டிலேயே உயர்கல்வி படிப்பவர்களில் முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கின்றது.

12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் சுமார் ரூ.76.23 கோடி நிதியில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு இளைஞர் சமுதாயம் எழுச்சியோடு, வளமோடு, உடல் திறனோடு வாழவேண்டுமென்பதற்காக அந்தத் திட்டத்தையும் அமல்படுத்தியது அம்மாவின் அரசு. சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை ரூ.37.90 கோடி வழங்கி, விளையாட்டு வீரர்களை ஊக்குவித்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்வி தொலைக்காட்சி நிறுவப்பட்டு அந்த மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்திய அரசு அம்மாவின் அரசு. தமிழ்நாட்டில், வேலை நாடும் இளைஞர்களையும், வேலையளிக்கும் தனியார் துறை நிறுவனங்களையும் இணைக்க ஒரு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் தொடங்கப்பட்டது. இதன்மூலமாக, இதுவரை 11,700 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி, பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டை தமிழ்நாட்டிற்கு ஈர்த்து, தமிழகத்தை தொழில் துறையில் தலை நிமிர வைத்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதே வழியில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசும் 2019 ஜனவரி மாதம் உலகத் தொழில் முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி தொழில் முதலீட்டை ஈர்த்து 304 தொழில் துவங்குவதற்கு அடித்தளமிட்ட அரசு அம்மாவின் அரசு.

ஒரு சோதனையான காலமான கொரோனா வைரஸ் தொற்று இருந்த காலக்கட்டத்திலும், இந்தியாவிலேயே சுமார் ரூ.60,000 கோடி அளவில் தொழில் முதலீட்டை ஈர்த்து, 74 தொழில்கள் துவங்குவதற்கு அடித்தளமிட்ட அரசும் அம்மாவின் அரசு. இதுபோன்று புதிய, புதிய தொழில்கள் தமிழகத்தில் உருவாக்கியதன் மூலமாக படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்த அரசும் மாண்புமிகு அம்மாவின் அரசு.

அசைக்க முடியாத செல்வாக்கு பெற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தான் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவை அனைத்துமே நாட்டின் எதிர்காலமான மாணவர்களை, இளைஞர்களை வலுப்படுத்தி, இந்தச் சமூகத்தை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்வதற்கே.

ஒரு தலைவனுக்கு உரிய ஆளுமைகளாக என்னென்ன கூறப்படுமோ அவை அத்தனையும் மாண்புமிகு அம்மா அவர்களின் இயல்பான குணங்களாக இருந்துள்ளது என்பது இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஒரு முன்னுதாரணம் ஆகும்.

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், எடுத்த துணிச்சலான முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை.

இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமில்லா வாழ்விற்குப் பொருத்தமாக, நேற்றைய தினம் மெரினா கடற்கரையில், மிகப்பெரிய

நினைவு மண்டபம் திறக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இன்று, நான் ஆளுமை திறன்மிக்க, அச்சம் என்ற சொல் அறியாத, எங்கள் அம்மா அவர்கள் வாழ்ந்த போயஸ் கார்டனில் உள்ள “வேதா நிலையம்” நினைவு இல்லத்தை நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம். அந்த நினைவு இல்லத்தை இலட்சக்கணக்கான மக்கள் பார்வையிட்டு, மாண்புமிகு அம்மாவுடைய வாழ்க்கை வரலாற்றை தெரிந்து கொள்வதற்காக அதையும் நாங்கள் நிறைவேற்றி இருக்கின்றோம்.

மேலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருநாமத்தின் பெயரில் தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் பிரம்மாண்டமான அழகிய தத்ரூபமான மாண்புமிகு அம்மா அவர்களின் முழு திருவுருவச் சிலையை இன்றைக்கு நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம்.

ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற அரசு, அம்மாவின் அரசு என்பதை நினைவு கூற கடமைப்பட்டு இருக்கின்றேன். இதனை நிறுவிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.அன்பழகன் அவர்களுக்கும், அவருக்கு துணையாக இருந்த உயர்கல்வித் துறை முதன்மைச செயலாளர் அவர்களுக்கும், அதை வடிவமைத்த சிற்பிகளுக்கும், எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவச் சிலையை இங்கே சென்னையில் நாம் பிரம்மாண்டமாக அமைத்து திறந்திருக்கின்றோம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் நாள் அன்று ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற விதமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுசமயம், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வளாகத்தில் நிறுவப்பட்ட அம்மா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளையும் புகழையும் இன்றைய இளைய தலைமுறையினரும், இனிவரும் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில், இந்த இனிய விழாவினை ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!!

படமும் / செய்தியும்

18ஆவது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.75 இலட்சம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 04.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், 18.02.2021 முதல் 25.02.2021 வரை சென்னையில் நடைபெறவுள்ள 18ஆவது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை இந்திய திரைப்பட திறனாய்வு கழகத்தின் பொதுச் செயலாளரும், சென்னை சர்வதேசத் திரைப்பட விழா இயக்குநருமான திரு. ஏ. தங்கராஜ் அவர்களிடம் வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசால், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த அரசுடைமையாக்கப்பட்ட 'வேதா நிலையம்' நினைவு இல்லம் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.01.2021 அன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.01.2021 அன்று சென்னை, போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த அரசுடைமையாக்கப்பட்ட "வேதா நிலையம்" நினைவு இல்லத்தினை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1948ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24ஆம் நாள் பிறந்தார். மாண்புமிகு அம்மா அவர்கள் தென்னிந்திய திரைப்பட உலகில் கலைச்செல்வி என்று புகழப் பெற்றார். மாநிலங்களவை உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் என மக்கள் பணியினை தொடர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர் ஆவார். 1991ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றார். அதன் பின்னர், 2001–2006, 2011–2016 மற்றும் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தல்களிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிபெற்று 15½ ஆண்டுகாலம் தமிழ்நாடு முதலமைச்சராக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி சிறப்பான ஆட்சியினை தந்து மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிறப்புகளையும், நாட்டிற்கு அவர் செய்த சாதனைகளையும், தியாகங்களையும்

பொதுமக்கள் அறியும் வண்ணம் அன்னார் வாழ்ந்த "வேதா நிலையம்" இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு நினைவிடமாக மாற்றப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 17.08.2017 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த "வேதா நிலையம்" இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, அவர்கள் பயன்படுத்திய பொருட்களைப் பேணிக் காக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளை அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசால் அரசுடைமையாக்கப்பட்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த "வேதா நிலையம்" நினைவு இல்லத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த "வேதா நிலையம்" இல்லம் 10 கிரவுண்ட் 322 சதுர அடி பரப்பளவில் அமையப்பெற்றுள்ளது. முன்பகுதியில் எழில்மிகு தோட்டத்துடன் கூடிய "வேதா நிலையம்" இல்லத்தினை அன்னார் வாழ்ந்த காலத்தில் இருந்ததைப் போல பழமை மாறாமல் தமிழ்நாடு அரசால் புனரமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் "வேதா நிலையம்" இல்லத்தில் அன்னார் அவர்கள் வாழ்ந்த அறை, நூலகம், அலுவலக அறை, விருந்தினர் காத்திருப்பு அறை, விருந்தினர் சந்திப்பு அறை, கூட்ட அரங்கு ஆகிய இல்லத்தின் அனைத்து இடங்களிலும் பூச்சு வேலைப்பாடுகள், தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

படமும் / செய்தியும்

ரூ.24.78 கோடி மதிப்பீட்டில் நீரொழுங்கி, அணைக்கட்டு மற்றும் தடுப்பணைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 08.01.2021 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ், செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் மயிலாடுதுறை, விருதுநகர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் நீரொழுங்கி, அணைக்கட்டு மற்றும் தடுப்பணைகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் ரூ.12,110 கோடி தள்ளுபடி, 16.43 இலட்சம் விவசாயிகள் பயன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன் கீழ்
ஆற்றிய உரை – 05.02.2021

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழி. உழவுத்தொழில் அன்றி, பிற தொழில்களைச் செய்யும் அனைவரையும், உழவர்களே தாங்குவதால், அவர்களே இந்த உலகத்திற்கே அச்சாணி போன்றவர்கள். ஒரு நாட்டின் வளம், அந்த நாட்டின் விவசாயத்தைப் பொறுத்தே அமையும். அதனால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வேளாண்மை உள்ளிட்ட முதன்மை துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, பல திட்டங்களைத் தீட்டி, அதனைச் செயல்படுத்த, அதிக நிதி ஒதுக்கீடும் வழங்கினார்கள். அந்த வழியை வழுவாமல் பின்பற்றும் எனது தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும், வேளாண் பெருமக்களின் நலன் பேணவும், வேளாண்மை செழிக்கவும் பல திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

குடிமராமத்து மற்றும் பல்வேறு நீர்ப்பாசன மேம்பாட்டு திட்டங்கள் மூலம் சிறப்பான நீர் மேலாண்மைத் திட்டங்கள், வேளாண் தொழில் செழிக்க நுண்ணீர்ப் பாசனம், ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுப் பண்ணையம், வேளாண் விற்பனை மையங்கள் மேம்பாடு, காய்கறி, பழங்கள் சாகுபடியை ஊக்குவிக்க சந்தை தொடர் கட்டமைப்புத் திட்டம், உயர்தொழில்நுட்ப சாகுபடி, பயிர் காப்பீட்டுத் திட்டம் எனப் பல்வேறு திட்டங்கள் எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயம் சார்ந்த தொழில்களான கால்நடை பராமரிப்பு, மீன்வளம் போன்ற துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கால்நடைத் துறையின் பங்கும் அதிகரித்து வருகிறது.

விவசாயிகள் துயர் ஏற்படும்போதெல்லாம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உதவிக்கரம் நீட்டி, அவர்களைக் காப்பதில் முன்னிலையில் இருந்து வருகின்றது. அதனால்தான், 2016ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் மீண்டும் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற உடன், 31.03.2016 வரை நிலுவையில் இருந்த 5,318.73 கோடி ரூபாய் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தார். இதனால் 12.02 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன்பெற்றனர்.

2017ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக இழப்பைச் சந்தித்த விவசாயப் பெருமக்களுக்கு 2,247 கோடி ரூபாய் வறட்சி நிவாரணத் தொகையாக மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியது. இதைத் தொடர்ந்து, விவசாயிகளின் வாழ்வு செழிக்க, பல்வேறு நலத்திட்டங்களும், வேளாண் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்களும் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், 2019–2020ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றின் காரணமாக உலக நாடுகள் பலவும் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. தமிழ்நாட்டிலும் இதன் தாக்கம் இருந்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியது. இந்நிலையில், விவசாயமும் பாதிப்புக்கு உள்ளாகியதுடன், தொடர்ந்து ஏற்பட்ட நிவர், புரெவி போன்ற புயல்களும், அதைத் தொடர்ந்து, சென்ற மாதம் பருவம் தவறிப் பெய்த கடும் மழையும், பெருத்த பயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியதால், கடன் பெற்று பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் பெரும் அல்லலுக்கு உள்ளாகினர். இந்தப் பேரிடர், அறுவடைகளுக்குத் தயாராக இருந்த நெல், கரும்பு, வாழை, தோட்டப் பயிர்களை மட்டுமல்லாது, மானாவாரி பயிர்களையும் பெருமளவில் சேதப்படுத்தியது.

வேளாண் பெருமக்களின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு, மத்திய அரசின் நிதி விடுவிப்பையும் எதிர்பாராமல், சாகுபடி செய்த பயிர்களுக்கான இடுபொருள் உதவித்தொகை 1,717 கோடி ரூபாயை 16.43 இலட்சம் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க உத்தரவிட்டு, அந்தத் தொகையையும் நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. இந்த இடுபொருள் உதவித்தொகையானது, விவசாயிகளின் துயரைத் துடைத்தாலும், அவர்கள் மீண்டும் பயிர்த்தொழிலைத் தொடர உதவ வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எண்ணியது. மேலும், விவசாயிகள், பல்வேறு விவசாய சங்கங்கள், சாகுபடி பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள பெருத்த சேதத்தைக் கருத்தில் கொண்டு, நிலுவையில் உள்ள பயிர்க்கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

கீழே விழுந்தவர்களை மேலே தூக்கி விட்டால் மட்டும் போதாது, அவர்கள் மேலும் வலுப்பெற உதவி செய்திட வேண்டும் என்ற உயரிய சிந்தனையில், எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகின்றது. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16.43 இலட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அதிகமாக நேசிப்பவனே அதிகமாக உதவி செய்பவன்". நானும் ஒரு விவசாயி; விவசாயிகளை அதிகமாக நேசிப்பவன்; வேளாண் பெருங்குடி மக்களின் இன்னலைத் தீர்ப்பதே எனது முதல் கடமை என்னும் நிலையில் இருந்து எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையினால், பயிர்க்கடன் நிலுவை வைத்துள்ள 16.43 இலட்சம் வேளாண் பெருமக்களும் எந்தவிதமான சிரமமும் இன்றி, வரும் ஆண்டில் பயிர் சாகுபடியைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போதும், நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் அளிப்பதாக திமுகவினர் வாக்குறுதி அளித்தனர். அவ்வாக்குறுதியை அவர்களால் நிறைவேற்றவே முடியவில்லை என்பது தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை. அதேபோன்று, 2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது, நாங்கள் வெற்றி பெற்று வந்தவுடன், விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் வாக்குறுதி அளித்தார். நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கட்சியினர் 38 இடங்களில் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றவுடன், மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்தார்கள். இதுதான் அவர்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் கடைப்பிடிக்கும் வாடிக்கை. தேர்தலின் போது அளிக்கப்படும் வாக்குறுதியை நிறைவேற்றும் ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

மாண்புமிகு அம்மாவும், மாண்புமிகு அம்மாவின் அரசும்,

சொல்வதைச் செய்வோம்;

செய்வதை மட்டுமே சொல்வோம்;

சொல்லாத பிற நன்மைகளையும் செய்வோம்.

மாண்புமிகு அம்மாவின் அரசு தற்போது பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல், அரசாணையையும் வெளியிட்டு, அதற்கான நிதி ஆதாரத்தையும் வருகின்ற நிதிநிலை அறிக்கையிலேயே ஏற்படுத்த உள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், இந்த அறிவிப்பு உடனடியாக செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

நன்றி.

கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற 16,43,347 விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகை ரூ.12,110.74 கோடி தள்ளுபடி

<u>சுருக்கம்</u>

கூட்டுறவு – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி எண். 110ன் கீழான அறிவிப்பு – 31.01.2021 அன்று நிலுவையிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற 16,43,347 விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகை ரூ.12110.74 கோடி தள்ளுபடி – ஆணை வெளியிடப்படுகிறது.

<u>கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை</u>

அரசாணை (நிலை) எண். 15 — நாள்: 08.02.2021
சார்வரி வருடம், தை 26,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்க:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110ன் கீழ் ஆற்றிய உரை, நாள் 05.02.2021. (த.நா.ச.பே.எண்.01).
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் (மு.கூ.பொ) கடிதம் எண்.ந.க.6666/ 2021 வேகதி2, நாள் 05.02.2021.

<u>ஆணை:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.02.2021 அன்று சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ், கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16.43 இலட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார்கள்.

2. மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தமது 05.02.2021 நாளிட்ட கருத்துருவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு 31.01.2021 அன்று நிலுவையில் உள்ள 16,43,347 விவசாயிகளின் ரூ.12,110.74 கோடி பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.02.2021 அன்று சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் அறிவித்தவாறு 31.01.2021 அன்று கூட்டுறவு வங்கிகளில் நிலுவையில் உள்ள 16,43,347 விவசாயிகளின் பயிர்க்கடன் ரூபாய் 12,110.74 கோடியை தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி அரசால் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படும். இத்திட்ட செயலாக்கம் தொடர்பான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அத்துறையின் அ.சா.கு.எண். 673/இ.செ (கூ.உ.ம.நு.பா)/2021, நாள் 08.02.2021 –ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

தமிழ்நாடு அரசின் சார்பில் 72ஆவது இந்தியக் குடியரசு தின விழாக் கொண்டாட்டம்

தமிழ்நாடு அரசின் சார்பில் இந்தியக் குடியரசு தினவிழாக் கொண்டாட்டம் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மகாத்மா காந்தியடிகள் சிலை அருகே 26.01.2021 அன்று காலை உற்சாகத்துடன் தொடங்கியது. விழா நடைபெறும் இடத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகையின்போது அவருக்கு முன்னும் பின்னும் போக்குவரத்துக் காவல் பிரிவினர் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்து வர, விழா மேடையை அடைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் இ.ஆ.ப., அவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். இதனையடுத்து விமானப்படை வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுப்புடன் விழா மேடைக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து முப்படைத் தளபதிகள், காவல்துறை உயர் அலுவலர்கள் ஆகியோரை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

தேசியக் கொடியேற்றம்

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தினார். இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர் வானத்தில் தாழ்வாகப் பறந்து சென்று தேசியக் கொடியின் மீது மலர் தூவியது கண் கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து இராணுவப் படை, கடற்படை, விமானப் படையினரின் அணிவகுப்பு நடந்தது. போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், ஏவுகணை, ரேடார், செயற்கைக்கோள் போன்றவைகளின் மாதிரிகளுடன் விமானப்படை வாகனமும், நவீன துப்பாக்கிகள், பீரங்கியுடன் இராணுவ

வீரர்களின் வாகனமும், இராணுவ கனரக தொழிற்சாலை வாகனமும் அணிவகுத்து கொண்டுவரப்பட்டன.

கடலோரக் காவல்படை, முன்னாள் இராணுவத்தினரின் படைப்பிரிவு, சி.ஆர்.பி.எப்., சி.ஐ.எஸ்.எப்., ஆர்.பி.எப்., படைப்பிரிவுகள், தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (ஆண்கள், பெண்கள் படை), ஆண், பெண் கமாண்டோ படைப்பிரிவினர் உட்பட பல பிரிவினர் அணிவகுத்து வந்தனர்.

தொடர்ச்சியாக நீலகிரி படைப்பிரிவு, கடலோரப் பாதுகாப்புக் குழு, குதிரைப் படை, சிறைத் துறை படை, தீயணைப்புத்துறை, ஊர்க்காவல் படை அணிவகுப்பும், அவர்களது இசைக் குழுவினர்களும் அணிவகுத்து வந்தனர். அந்த அணிவகுப்புகளின் மரியாதையை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

வீரதீரச் செயல் புரிந்தமைக்கான விருதுகள்

இதனையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வீர தீரச் செயல் புரிந்தமைக்கான அண்ணா பதக்கங்கள் உள்ளிட்ட பதக்கங்களை வழங்கினார்கள்.

அண்ணா பதக்கம்–2021 (அரசு ஊழியர் பிரிவு) இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்க வட்டம், புலிவலம், அரசு உயர்நிலைப் பள்ளி உதவி ஆசிரியர் திருமதி ப. முல்லை, சேலம் மாவட்டம், ஓசூர் வனச்சரகம், கால்நடை உதவி மருத்துவர், திரு.எ.பிரகாஷ், எம்.வி.எஸ்.சி., மதுரை மாவட்டம், திருமங்கலம், இரயில் வண்டி ஓட்டுநர் திரு.ஜெ.சுரேஷ் ஆகியோருக்கும், அண்ணா பதக்கம் (பொது மக்கள் பிரிவு) நீலகிரி மாவட்டம், திரு.ஆர்.புகழேந்திரன் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்ணா பதக்கங்களை வழங்கினார்கள்.

மக்களிடையே நல்லுணர்வை ஏற்படுத்தி மத மற்றும் சமூக நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டுவரும் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.கே.ஏ.அப்துல் ஜப்பார் அவர்களுக்கு இந்த ஆண்டிற்கான கோட்டை அமீர் விருது வழங்கப்பட்டது.

ஆளுமையில் சிறந்த உழவர், உற்பத்தியாளர் குழுமங்களுக்கான விருதினை ஈரோடு துல்லிய பண்ணைய உற்பத்தியாளர் குழுமம் மற்றும் வெள்ளியங்கிரி உழவன் உற்பத்தியாளர் குழுமங்களுக்கு வழங்கப்பட்டது. வர்த்தகத்தில் சிறந்த உழவர், உற்பத்தியாளர் குழுமங்களுக்கான

விருதினை, தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் குழுமம் மற்றும் விருதை சிறுதானிய உழவர் உற்பத்தியாளர் குழுமங்களுக்கு வழங்கப்பட்டது.

காந்தியடிகள் காவலர் பதக்கம், சென்னை பெருநகர காவல், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, பெண் காவல் ஆய்வாளர் திருமதி T.மகுடீஸ்வரி, சேலம் மண்டலம், மத்திய புலனாய்வுப் பிரிவு உதவி ஆய்வாளர் திரு.N.செல்வராஜு, விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தாலுக்கா காவல் நிலைய தலைமைக் காவலர், திரு.S.சண்முகநாதன், திருவண்ணாமலை மாவட்டம், கீழ்கொடுங்காலூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு.S.இராஜசேகரன் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவலர் பதக்கங்களை வழங்கினார்கள்.

சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் விருது, முதல் பரிசு சேலம் நகர காவல் நிலையத்திற்கும், இரண்டாம் பரிசு திருவண்ணாமலை நகர காவல் நிலையத்திற்கும், மூன்றாம் பரிசு சென்னை கிழக்கு மண்டலத்தைச் சேர்ந்த ஜே 4 கோட்டூர்புரம் காவல் நிலையத்திற்கும் வழங்கப்பட்டது.

திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடித்து அதிக உற்பத்தித் திறன் பெற்ற விவசாயிக்கான வேளாண்மைத் துறை சிறப்பு விருதான “திரு.சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது” விருதுநகர் மாவட்டம், வடக்கு திருவில்லிபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.க.செல்வகுமார் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் கண்டுகளித்தனர். நிறைவாக நாட்டுப்பண் இசைக்க விழா நிறைவு பெற்றது. அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் காவல் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு முதல் பரிசும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு இரண்டாம் பரிசும், சுற்றுலாத் துறைக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது.

மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 74ஆவது நினைவு தினம்

மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 74ஆவது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 30.01.2021 அன்று சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோகித்** அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

திருவள்ளுவர் திருநாள்

15.01.2021 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் தமிழறிஞர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.



கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக, இணையவழி வகுப்புகளில், மாணாக்கர்கள் கலந்துகொள்ள ஏதுவாக 9,69,047 மாணாக்கர்களுக்கு "விலையில்லா 2 GB Data Cards"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 01.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கோவிட் பெருந்தொற்று காரணமாக கல்லூரிகள் மூடப்பட்டுள்ள நிலையில் இணைய வழி வகுப்புகள் மூலமாக மாணாக்கர்கள் சிறந்த முறையில் கல்வி கற்றிட, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் கல்வி உதவித் தொகை பெறும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் 9,69,047 மாணாக்கர்களுக்கு பிப்ரவரி 2021 முதல் மே 2021 வரை நான்கு மாதங்களுக்கு நாளொன்றுக்கு 2 ஜிபி தரவு பெற்றிட எல்காட் நிறுவனத்தின் மூலமாக, விலையில்லா தரவு அட்டைகள் வழங்கிடும் திட்டத்தைத் துவக்கி வைக்கும் அடையாளமாக, 9 மாணாக்கர்களுக்கு விலையில்லா தரவு அட்டைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 08.01.2021 அன்று வெளியிட்ட அறிக்கையில், கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக கல்லூரிகள் மூடப்பட்டுள்ள நிலையில், கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலனுக்காக கல்வி நிறுவனங்கள் இணைய வழி வகுப்புகளை நடத்தி வருகின்றன. இந்த இணைய வழி வகுப்புகளில் மாணாக்கர்கள் கலந்துகொள்ள ஏதுவாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் கல்வி உதவித்தொகை பெறும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் 9,69,047 மாணாக்கர்களுக்கு நான்கு மாதங்களுக்கு நாளொன்றுக்கு 2 ஜிபி தரவு (2 GB Data) பெற்றிட எல்காட் நிறுவனத்தின் மூலமாக, விலையில்லா தரவு அட்டைகள் (Data Cards) வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, இணைய வழி வகுப்புகள் மூலமாக சிறந்த முறையில் கல்வி கற்றிட, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் கல்வி உதவித்தொகை பெறும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா தரவு அட்டைகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9 மாணாக்கர்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார்கள்.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 01.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், விலையில்லா தரவு அட்டைகளை மாணாக்கர்களுக்கு வழங்கினார்கள்.



திருவள்ளுவர் திருநாள் விருதுகள் மற்றும் சித்திரைத் தமிழ் புத்தாண்டு விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 01.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 01.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் அமைப்பிற்கும், ஊடகங்களுக்கும், திருவள்ளுவர் திருநாள் விருதுகள், சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ், வார இதழ், திங்களிதழ் விருதுகள், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகள், சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள், மதுரை, உலகத் தமிழ்ச் சங்க விருதுகள், தமிழ்ச் செம்மல் விருதுகள் என மொத்தம் 77 விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழுக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பாடுபடும் சான்றோர்களையும், தமிழறிஞர்களையும் சிறப்பிக்கும் வகையில், ஆண்டுதோறும் விருதுகளை வழங்கிச் சிறப்பித்து வந்தார்கள். அவ்வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, திருவள்ளுவர் திருநாள் விருதுகளாக 2021ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது முனைவர் வைகைச்செல்வன் அவர்களுக்கும், 2020ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது திரு. அ. தமிழ்மகன் உசேன் அவர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் விருது திரு. வரகூர் அ. அருணாசலம் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா விருது மறைந்த திரு. கடம்பூர் எம்.ஆர். ஜனார்த்தனன் அவர்களுக்குரியதை அவரின் சார்பில் அவரது மகன் திரு. குடியரசு ஜனார்த்தனன் அவர்களிடமும், பெருந்தலைவர் காமராசர் விருது முனைவர் ச. தேவராஜ் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பூவை செங்குட்டுவன் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு. அறிவுமதி (எ) மதியழகன் அவர்களுக்கும், தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது திரு.வி.என்.சாமி அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் வீ. சேதுராமலிங்கம் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை

அண்ணல் அம்பேத்கர் விருது

தந்தை பெரியார் விருது

மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளாக 2020ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருதிற்கு வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு, விருதிற்கான தொகையான ரூபாய் 5 இலட்சத்திற்கான காசோலை, கேடயம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அச்சங்கத்தின் தலைவர் கலைமாமணி முனைவர் வி.ஜி. சந்தோசம் மற்றும் இணைச் செயலாளர் திரு. வி.ஜி.பி. ராஜாதாஸ் ஆகியோரிடம் வழங்கி கௌரவித்தார்கள்.

கபிலர் விருது திரு. செ.ஏழுமலை அவர்களுக்கும், உ.வே.சா விருது திரு. கி. இராஜநாராயணன் அவர்களின் சார்பாக பெயரன் திரு. தீபன் அவர்களுக்கும், கம்பர் விருது மருத்துவர் எச்.வி. ஹண்டே அவர்களுக்கும், சொல்லின் செல்வர் விருது திரு. நாகை முகுந்தன் அவர்களுக்கும், உமறுப் புலவர் விருது திரு. ம.அ. சையத் அசன் (எ) பாரிதாசன் அவர்களுக்கும், ஜி.யு.போப் விருது ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த முனைவர் திருமதி உல்ரீகே நிகோலசு அவர்களின் சார்பாக அவரது மகன் திரு. தேசிகன் அவர்களிடமும், இளங்கோவடிகள் விருது திரு.மா. வயித்தியலிங்கன் அவர்களுக்கும், அம்மா இலக்கிய விருது முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும், சிங்காரவேலர் விருது திரு.ஆ.அழகேசன் அவர்களுக்கும், மறைமலையடிகளார் விருது திரு.மறை தி. தாயுமானவன் அவர்களுக்கும், அயோத்திதாசப் பண்டிதர் விருது முனைவர் கோ.ப. செல்லம்மாள் அவர்களுக்கும், அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது முனைவர் ஊரன் அடிகள் அவர்களுக்கும், காரைக்கால் அம்மையார் விருது முனைவர் மோ. ஞானப்பூங்கோதை அவர்களுக்கும், 2019ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது திரு. சே. இராஜாராமன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மேலும், 2020ஆம் ஆண்டிற்கான தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது தினமணி நாளிதழ் சார்பில் அதன் மேலாண்மை இயக்குநர் திரு. சித்தார்த் மற்றும் ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதன் அவர்களிடமும், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது கல்கி வார இதழ் சார்பில் கல்வி பொறுப்பாசிரியர் திரு. ரமணன் அவர்களிடமும், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது செந்தமிழ் திங்களிதழ் சார்பில் அதன் ஆசிரியர் திரு. இரா. சதாசிவம் அவர்களிடமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதுத் தொகையாக தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, கேடயம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

2020ஆம் ஆண்டிற்கான செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் விருதான தேவநேயப்பாவாணர் விருதினை முனைவர் கு.சிவமணி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியதோடு, ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

2020ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகளை மறைந்த திரு. சோ. சேசாச்சலம் அவர்களின் சார்பில் அவரது மகன் திரு.கோபிநாத் அவர்களிடமும், முனைவர் இராம. குருநாதன்,

திரு. ப. குணசேகர், முனைவர் பத்மாவதி விவேகானந்தன், திருமதி சு. ஜோதிர்லதா கிரிஜா, திரு. ஜெ. இராம்கி (எ) இராமகிருட்டினன், சுவாமி விமூர்த்தானந்தர், திருமதி மீரா ரவிசங்கர், திருமதி திலகவதி, திரு. கிருட்டின பிரசாத் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மதுரை, உலகத் தமிழ்ச் சங்க விருதுகளாக 2020ஆம் ஆண்டிற்கான இலக்கிய விருது பிரான்சு நாட்டைச் சேர்ந்த முனைவர் அலெக்சிசு தேவராசு சேன்மார்க் அவர்களுக்கும், மொழியியல் விருது சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் சுப. திண்ணப்பன் அவர்களின் சார்பில் அவரது மகள் திருமதி இன்பமணி அவர்களிடமும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

2020ஆம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்ற வகையில் சென்னை மாவட்டத்திற்கு திரு. ஜெ.வா. கருப்புசாமி அவர்களுக்கும், திருவள்ளூர் மாவட்டத்திற்கு திரு. வேணு புருஷோத்தமன் அவர்களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு முனைவர் சு.சதாசிவம் அவர்களுக்கும், வேலூர் மாவட்டத்திற்கு மருத்துவர் சே. அக்பர் கவுஸர் அவர்களுக்கும், கிருட்டினகிரி மாவட்டத்திற்கு திரு. மா. முருககுமரன் அவர்களுக்கும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு முனைவர் இரா. வெங்கடேசன் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கு பரிக்கல் ந. சந்திரன் அவர்களுக்கும், கடலூர் மாவட்டத்திற்கு முனைவர் ஜா. இராஜா அவர்களுக்கும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு முனைவர் அ. செந்தில்குமார் (எ) தமிழ்க்குமரன் அவர்களுக்கும், அரியலூர் மாவட்டத்திற்கு முனைவர் சா. சிற்றரசு அவர்களுக்கும், சேலம் மாவட்டத்திற்கு கவிஞர் பொன்.சந்திரன் அவர்களுக்கும், தருமபுரி மாவட்டத்திற்கு பாவலர் பெரு.முல்லையரசு அவர்களுக்கும், ஈரோடு மாவட்டத்திற்கு முனைவர் கா. செங்கோட்டையன் அவர்களுக்கும், கரூர் மாவட்டத்திற்கு திருமதி சி. கார்த்திகா அவர்களுக்கும், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு திரு. எம்.ஜி. அன்வர் பாட்சா அவர்களுக்கும், திருப்பூர் மாவட்டத்திற்கு முனைவர் துரை அங்குசாமி அவர்களுக்கும், நீலகிரி மாவட்டத்திற்கு திரு.ம.பிரபு அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு திரு. சோமவீரப்பன் அவர்களுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு திரு. ஜீவி (ஜீ. வெங்கட்ராமன்) அவர்களுக்கும், சிவகங்கை மாவட்டத்திற்கு திரு. இரா.சேதுராமன் அவர்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு திரு.பழ மாறவர்மன் அவர்களுக்கும், திருவாரூர் மாவட்டத்திற்கு திரு. இராம. வேல்முருகன்

அவர்களுக்கும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு திரு.மா. கோபால்சாமி அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு திரு. ஆ. முனியராஜ் அவர்களுக்கும், மதுரை மாவட்டத்திற்கு முனைவர் போ. சத்தியமூர்த்தி அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்டத்திற்கு திரு.தா தியாகராசன் அவர்களுக்கும், தேனி மாவட்டத்திற்கு திரு.த. கருணைச்சாமி அவர்களுக்கும், விருதுநகர் மாவட்டத்திற்கு கவிஞர் சுரா (எ) சு. இராமச்சந்திரன் அவர்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு திரு.வீ. செந்தில் நாயகம் அவர்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு திரு.ச. காமராசு (முத்தாலங்குறிச்சி காமராசு) அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு திரு. பா. இலாசர் (முளங்குழி பா. இலாசர்) அவர்களுக்கும், திருப்பத்தூர் மாவட்டத்திற்கு முனைவர் ச. சரவணன் அவர்களுக்கும், செங்கல்பட்டு மாவட்டத்திற்கு நந்திவரம் பா. சம்பத் குமார் அவர்களுக்கும், இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு கவிஞர் பனப்பாக்கம் கே. சுகுமார் அவர்களுக்கும், தென்காசி மாவட்டத்திற்கு திரு. மு.நாராயணன் அவர்களுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு திரு.சி. உதியன் அவர்களுக்கும், மயிலாடுதுறை மாவட்டத்திற்கு திரு. துரை குணசேகரன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை, பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

2020 – 2021ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், “தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட திருக்குறள் அரபு மொழி பெயர்ப்பு நூல் உலக அளவில் மாபெரும் அங்கீகாரத்தையும், தமிழின் பெருமையை உயர்த்துவதாகவும் அமைந்தது. இதனைக் கருத்தில் கொண்டு திருக்குறள் அரபு மொழியில் இசையுடன் ஒலிப்பதிவு செய்து வெளியிடப்படும்” என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, ரூ.2.25 இலட்சம் செலவில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரபுத் துறை பேராசிரியர் முனைவர் ஜாகீர்உசேன் அவர்களால் திருக்குறள் அரபு மொழியில் இசையுடன் ஒலிப்பதிவு செய்து தயாரிக்கப்பட்ட ‘திருக்குறள் அரபு – இசைக்குறள் தகடு’ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, ஆற்காடு இளவரசர் திரு. முகம்மது அப்துல் அலி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

படமும் செய்தியும்

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 125ஆவது பிறந்தநாள்

23.01.2021 அன்று சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில், தமிழ்நாடு அரசின் சார்பில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் ரூ.535.27 கோடி மதிப்பீட்டில் 5,503 அடுக்குமாடிக் குடியிருப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 04.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, தேனி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 535 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5,503 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள்.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமான ஒன்றாக விளங்கும் உறைவிடத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023இன் குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் திட்டத்தின் கீழ், தமிழகத்தின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் நலிவுற்ற ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார நிலையினை

மேம்படுத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னை மாவட்டம், சிவலிங்கபுரம் திட்டப் பகுதியில் 3 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 32 அடுக்குமாடி குடியிருப்புகள், கேசவப்பிள்ளை பூங்கா பகுதி–2 திட்டப் பகுதியில் 139 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1,056 அடுக்குமாடி குடியிருப்புகள், வடக்கு கிரியப்பா சாலை திட்டப் பகுதியில் 11 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 140 அடுக்குமாடி குடியிருப்புகள், வாலஸ் தோட்டம் திட்டப் பகுதியில் 12 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 128 அடுக்குமாடி குடியிருப்புகள்;

வேலூர் மாவட்டம், கன்னிகாபுரம் திட்டப் பகுதியில் 20 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 224 அடுக்குமாடி குடியிருப்புகள், டோபிகானா பகுதி–2 திட்டப் பகுதியில் 5 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 64 அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, பொய்கைபட்டி திட்டப் பகுதியில் 8 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 96 அடுக்குமாடி குடியிருப்புகள், வண்ணாரப்பேட்டை (டோபி காலனி) திட்டப் பகுதியில் 31 கோடியே 59 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 384 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, அய்யனார் கோயில் திட்டப் பகுதியில் 31 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 384 அடுக்குமாடி குடியிருப்புகள்;

கோயம்புத்தூர் மாவட்டம், கல்லாமேடு திட்டப் பகுதியில் 7 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 100 அடுக்குமாடி குடியிருப்புகள், பிள்ளையார்புரம் திட்டப் பகுதியில் 9 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 112 அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, ஜெ.ஜெ. நகர் திட்டப் பகுதியில் 26 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 320 அடுக்குமாடி குடியிருப்புகள், அவிநாசி பேரூராட்சி, சோலை நகர் திட்டப் பகுதியில் 37 கோடியே 27 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 448 அடுக்குமாடி குடியிருப்புகள்;

ஈரோடு மாவட்டம், கொல்லம்பாளையம், எம்.ஜி.ஆர். நகர் திட்டப் பகுதியில் 17 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 192 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தேனி மாவட்டம், உத்தமபாளையம், சிக்காச்சியம்மன் கோயில் மேடு திட்டப் பகுதியில் 46 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 480 அடுக்குமாடி குடியிருப்புகள், தப்புகுண்டு திட்டப் பகுதியில் 41 கோடியே 48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 431 அடுக்குமாடி குடியிருப்புகள்; வடவீரநாயக்கன்பட்டி திட்டப் பகுதியில் 29 கோடியே 99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 312 அடுக்குமாடி குடியிருப்புகள்;

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில், வடசேரி மேற்கு, புளியடி திட்டப் பகுதியில் 12 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 120 அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், வாகைகுளம் திட்டப் பகுதியில் 21 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 240 அடுக்குமாடி குடியிருப்புகள், வாகைகுளம் பகுதி–2 திட்டப் பகுதியில் 20 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 240 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 535 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5,503 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

“மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா” படப்பிடிப்பு தளம் அமைக்க தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.3.50 கோடி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 04.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அவர்களிடம் படப்பிடிப்பு தளம் அமைப்பதற்கான காசோலையை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் உள்ள எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் அருகில் “மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா” படப்பிடிப்பு தளம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.3.50 கோடிக்கான காசோலையை தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் திரு.ஆர்.கே.செல்வமணி அவர்களிடம் வழங்கினார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் 26.08.2018 அன்று நடைபெற்ற திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் திறப்பு விழாவில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் அருகில் அரங்கம் கட்டித்தருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. அவர்களது கோரிக்கையினைக் கனிவுடன் ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் அரங்கம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் உள்ள எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் அருகில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா படப்பிடிப்பு தளம் அமைப்பதற்கு முதல் கட்டமாக தமிழ்நாடு அரசின் சார்பில் 16.09.2019 அன்று 1 கோடி ரூபாய்க்கான காசோலையும், 01.06.2020 அன்று இரண்டாம் கட்டமாக 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் திரு.ஆர்.கே. செல்வமணி அவர்களிடம் வழங்கினார்கள்.

அதன் தொடர்ச்சியாக, தற்போது மூன்றாம் கட்டமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் அரங்கம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.3.50 கோடிக்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் திரு.ஆர்.கே.செல்வமணி அவர்களிடம் வழங்கினார்கள்.

தைப் பொங்கல் திருநாளையொட்டி முதல்முறையாக 12,69,550 கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வேட்டி, சேலை மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில், 08.01.2021 அன்று வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 08.01.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கீழ், செயல்படும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 12,69,550 கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு முதன்முறையாக தைப் பொங்கல் திருநாளையொட்டி வேட்டி, அங்கவஸ்தரம் / சேலை மற்றும் பச்சரிசி, சிறுபருப்பு, எண்ணெய், நெய், வெல்லம், ஏலக்காய், முந்திரி, திராட்சை ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிடும் அடையாளமாக, 7 கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்கள்.

கொரோனா பெருந்தொற்றால் வேலைவாய்ப்பின்றி பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் தைப் பொங்கல் திருநாளை சிறப்புடன் கொண்டாடும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு முதல் முறையாக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்க ஆணையிட்டுள்ளது.அதன்படி, 5,94,147 ஆண் தொழிலாளர்களுக்கு வேட்டி மற்றும் அங்கவஸ்தரம், 6,75,403 பெண் தொழிலாளர்களுக்கு புடவை, அத்துடன் 2 கிலோ பச்சரிசி, 1 கிலோ சிறுபருப்பு, 500 கிராம் எண்ணெய், 100 கிராம் நெய், 1 கிலோ வெல்லம், 5 கிராம் ஏலக்காய், 25 கிராம் முந்திரி, 25 கிராம் திராட்சை ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கிட ரூ.94.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அப்பொங்கல் சிறப்பு தொகுப்பினை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கிடும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரருக்கு பொங்கல் சிறப்புத் தொகுப்பினை வழங்கினார்கள்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் ரூ.85.73 கோடி மதிப்பீட்டில் 8 பாலங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 08.01.2021 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் பயன்பாட்டிற்காக கட்டப்பட்ட பாலங்களை காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 08.01.2021 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், திருச்செங்கோடு – அரியானூர் சாலையில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தினை காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும் விருதுநகர், தூத்துக்குடி புதுக்கோட்டை, தேனி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் ரூ.40.73 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 பாலங்கள் மற்றும் ஒரு இரயில்வே கீழ்பாலத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உட்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்தும், பெருகிவரும்

சேலம் மாவட்டம் - திருச்செங்கோடு - அரியானூர் சாலை தே.நெ.45 8/6 கி.மீ சந்திப்பில்) அரியானூரில் கட்டப்பட்டுள்ள பாலம் ரூ.45.00 கோடி

தேனி மாவட்டம் - பூலாநந்தபுரம் - குச்சனூர் சாலை பூலாநந்தபுரத்தில் கட்டப்பட்டுள்ள பாலம் - ரூ.6.33 கோடி

போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சேலம் மாவட்டம், சேலம் தெற்குவட்டம், திருச்செங்கோடு – அரியானூர்சாலை கி.மீ.32/4 (தேசிய நெடுஞ்சாலை 544) அரியானூரில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், விருதுநகர் மாவட்டம் – இராஜபாளையம் வட்டம், இராஜபாளையம் – அய்யனார்கோவில் வழி செண்பகத்தோப்பு சாலை, தென்றல் நகரில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தூத்துக்குடி மாவட்டம் – சாத்தான்குளம் வட்டம், திசையன்விளை – உடன்குடி சாலை, மணிநகரில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடி வட்டம், செங்கமேடு – மணமடை – வெட்டிக்காடு சாலை, செங்கமேட்டில் ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், பூலாநந்தபுரம் – குச்சனூர் சாலை, பூலாநந்தபுரத்தில் ரூ.6.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், காந்திஜி சாலை, கண்ணப்பன் நகரில், பீளமேடு மற்றும் கோயம்புத்தூர் வடக்கு இரயில் நிலையங்களுக்கிடையில் உள்ள கடவு எண். 13க்கு மாற்றாக ரூ.14 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே கீழ்பாலம்;

சேலம் மாவட்டம் – வாழப்பாடி வட்டம், புழுதிக்குட்டை – சந்துமலை சாலை, புங்கமடுவில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டிலும்; ஆத்தூர் வட்டம், சேலம் – உளுந்தூர்பேட்டை – அம்மம்பாளையம் நரிக்குறவர் காலனி சாலையில் வசிஷ்ட நதியின் குறுக்கே ரூ.5 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 2 பாலங்கள்; என மொத்தம் ரூ.85.73 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் அனைத்து பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக நெடுஞ்சாலைத் துறையின் தொழில்நுட்பங்கள் மற்றும் துறையின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய “Ready Reckoner for Highway Engineers” எனும் தொழில்நுட்பக் கையேட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 01.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கோவிட் பெருந்தொற்று காரணமாக கல்லூரிகள் மூடப்பட்டுள்ள நிலையில் இணைய வழி வகுப்புகள் மூலமாக, கல்லூரி மாணாக்கர்கள் சிறந்த முறையில் கல்வி கற்றிட, அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் கல்வி உதவித்தொகை பெறும் சுயநிதி கல்லூரிகளில் பயிலும் 9,69,047 மாணாக்கர்களுக்கு பிப்ரவரி 2021 முதல் மே 2021 வரை நான்கு மாதங்களுக்கு நாளொன்றுக்கு 2 ஜிபி தரவு பெற்றிட எல்காட் நிறுவனத்தின் மூலமாக, விலையில்லா தரவு அட்டைகள் வழங்கிடும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, 9 மாணாக்கர்களுக்கு வழங்கினார்கள்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 17.01.2021 அன்று பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 104ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள **பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.** அவர்களின் திருவுருவச்சிலைக்கு கீழ், வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

Published by D. BASKARA PANDIAN, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: D. BASKARA PANDIAN, IAS